பக்கங்கள்: ஆறு

Registered as a Newspaper

Re-boring Re-grinding Line Boring etc...
Done within 24 hrs for all makes of vehicles
GENUINE JAPANESE PISTON LINER KIT SETS AND ENGINE BEARING FOR ALL JAPANESE DIESEL AND PETROL VEHICLES
EDIRISINGHE BROTHERS LTD.
'Auto Court'
567, Prince of Wales Avenue, Colombo - 14
Tel: 431808, 434012

# உதயன்

விலை ரூபா 3-50

றீ போறிங், றீ - ஙிரைண்டிங் மற்றும் லைன் - போறிங், போன்றவற்றிற்கு
எந்த வகையான வாகனங்களாயினும் 24 மணி நேரத்தில் செய்து கொடுக்கப்படும்.
தரமான ஜப்பான் பிஸ்டன், லைனர் கிட் செட்கள், எல்லாவிதமான ஜப்பான் டீசல், பெற்றோல் வாகனங்களுக்குரிய எஞ்சின் பெயரிங்களும் உண்டு.
எதிரிசிங்க பிரதர்ஸ் லிமிட்டெட், "ஓட்டோ கோட்"
567, பிரின்ஸ் ஒப்வேல்ஸ் எவனியு, கொழும்பு - 14.
தொலைபேசி - 431808, 434012.

சுடர் 5: பிரமோதூத ஹூ வைகாசி மீ 31 உ வியாழக்கிழமை ஹிஜ்ரி 1410 துல்ஹஃதா பிறை 20 (14-06-1990) UTHAYAN - A LIVELY NATIONAL TAMIL DAILY கதிர்:112

# கிழக்கில் தொடர்ந்து கடும் சண்டை நீடிப்பு!

## கொப்பேகடுவ தலைமையில் இராணுவ நடவடிக்கை

கொழும்பு, ஜூன் 14
கிழக்கில் தற்போது நடைபெற்று வரும் இராணுவ நடவடிக்கைக்கு பிரிகேடியர் கொப்பேகடுவ தலைமை வகிப்பதாக அறிய வந்தது.

கிழக்கில் கடும் சண்டை மூண்டதை அடுத்தே அங்கு பிரிகேடியர் கொப்பேகடுவ அனுப்பி வைக்கப்பட்டார் எனத் தெரியவந்தது.

வடமராட்சியில் இடம்பெற்ற "ஒப்பரேஷன் லிபரேஷன்" இராணுவ நடவடிக்கைபிரிகேடியர் கொப்பேகடுவ தலைமையில் தான் நடைபெற்றது என்பது தெரிந்ததே. (ஒ)

## கோட்டை ராணுவம் உஷார் புதிய "சென்றிகள்" அமைப்பு

யாழ்ப்பாணம், ஜூன் 14
யாழ். கோட்டையிலுள்ள இராணுவத்தினர் பாதுகாப்பைப் பலப்படுத்தி வருகின்றனர். அங்கு அமைந்துள்ள 'சென்றி' களை செப்பனிடுவதில் சிப்பாய்கள் ஈடுபட்டிருந்தனர்.

நேற்று புதிய 'சென்றி' கள் அமைத்து மண்மூட்டை அடுக்குவதிலும் அவர்கள் ஈடுபட்டிருந்ததைக் காணக் கூடியதாக இருந்தது.

வீரசிங்கம் மண்டபத்துக்கு முன்பாக மக்கள் கூடிநின்று இவற்றை அவதானித்தபடி இருந்தனர். (ஒ-3)

## யுத்த நிறுத்த முயற்சி தோல்வி நூற்றுக்கணக்கில் மக்கள் பலி

யாழ்ப்பாணம், ஜூன் 14

**கிழக்கு மாகாணத்தில் தொடர்ந்து கடும் சண்டை நடைபெற்று வருகிறது.**

**நேற்று நண்பகலுக்கு முன்பதாக யுத்த நிறுத்தம் ஒன்றைக் கொண்டுவர எடுக்கப்பட்ட முயற்சிகள் பலனளிக்கவில்லை.**

**சண்டையின்போது படையினர் நடத்தி வரும் விமானக் குண்டு வீச்சு, ஹெலிக்கொப்டர் மற்றும் ஷெல் தாக்குதல்களில் சிக்குண்டு நூற்றுக் கணக்கில் அப்பாவிப் பொது மக்கள் பலியாகினர்.**

விடுதலைப்புலிகள் முழுமூச்சுடன் தொடர்ந்து தாக்குதல் நடத்தி வருவதாகவும் —

எதிர்த்துத் தாக்குப் பிடிப்பதற்காக அரச படைகள் ஆகாயம், தரை, கடல் ஆகிய மூன்று மார்க்கங்களிலும் பெரும் தாக்குதல் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதாகவும் அறியவருகிறது.

கும்புறுமூலை பகுதியில் கடும் சண்டை இடம்பெற்று வருகிறது.

வான் தாக்குதல்கள் பல இடங்களிலும், பல நிலைகளிலும் பரவலாக மேற்கொள்ளப்பட்டு வருவதாலும்—

ஷெல் தாக்குதல்கள் நீண்ட தூரங்களை நோக்கி பலதிசைகளிலும் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் —

கிழக்கிற்கான தொலைத் தொடர்பு சேவைகள் முற்றாகச் சீர்குலைந்திருப்பதாலும்—

இந்தத் தாக்குதல்களில் ஏற்பட்ட உயிர் மற்றும் உடமைச் சேதங்கள் பற்றிய தகவல்களை திரட்டிப் பெறமுடியாதிருந்தது.

எனினும் பொது மக்கள் தரப்பில் நூற்றுக்கும் அதிகமானோர் உயிரிழந்திருப்பர் என்பதை ஏஜென்ஸி செய்திகள் ஊர்ஜிதப்படுத்தின.

கிழக்குத் தாக்குதலின் போது சுமார் இருநூற்றி ஐம்பது பொது மக்கள் வரையில் உயிரிழந்திருக்கலாம் என இந்திய வானொலி நேற்றிரவு தெரிவித்தது. (உ)

## பாண்டியன்குளத்துடன் பஸ்கள் திரும்பிவிட்டன

யாழ்ப்பாணம், ஜூன் 14
நேற்றுக்காலை யாழ்ப்பாணத்தில் இருந்து வெளியிடங்களுக்கு சென்ற இ.போ.ச. பஸ்கள் வவுனியா பாண்டியன் குளத்துடன் திரும்பி வந்தன.

எனினும் நேற்று மாலை யாழ்ப்பாணத்தில் இருந்து தனியார் பஸ்கள் கொழும்பு நோக்கி புறப்பட்டன.

இன்று தூர இடங்களுக்கான இ.போ.ச. பஸ் சேவைகள் நடைபெற மாட்டா என யாழ்- பஸ் டிப்போ அதிகாரி தெரிவித்தார்.

நேற்று பஸ் சேவையும், ரயில் சேவையும் சீர் குலைந்ததால் மக்கள் பெரும் அவதிப்பட்டதைக் காணக்கூடியதாகவிருந்தது. (இ-3)

## மறு அறிவித்தல் வரை வடபகுதி ரயில் சேவை ரத்தானது

யாழ்ப்பாணம், ஜூன் 14
வடபகுதிக்கான ரயில் சேவைகள் அனைத்தும் மறு அறிவித்தல் வரை இடை நிறுத்தப்பட்டுள்ளன என்று யாழ். ரயில்வே நிலையத்துக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் மெயில் ரயில் மட்டுமே இடை நிறுத்தப்படுவதாக அறிவிக்கப்பட்டது. எனினும் நேற்றுக்

(4 ஆம் பக்கம் பார்க்க)

## 37 போராளிகள் வீரமரணம்! படையினர் தரப்பிலும் பலர் பலி!

யாழ்ப்பாணம், ஜூன் 14
கடந்த மூன்று நாட்களாக கிழக்கில் இடம்பெற்று வரும் மோதல்களில் விடுதலைப் புலிகள் தரப்பில் 37 பேர் வீரமரணமடைந்தனர்.

விடுதலைப்புலிகள் மக்கள் முன்னணி விடுத்த அறிக்கை ஒன்றில் இந்த விவரம் தெரிவிக்கப் பட்டிருக்கிறது.

உயிரிழந்தபோராளிகளுக்கு அந்த அறிக்கையில் வீர வணக்கம் தெரிவிக்கப்பட்டிருந்தது.

இதேவேளை இந்த மோதல்களில் இலங்கைப் படைகளைச் சேர்ந்த சுமார் நூறு பேர் வரை உயிரிழந்ததாக மற்றொரு செய்தி தெரிவித்தது.

உயிரிழந்த படை வீரர்களின் எண்ணிக்கை சரியாக ஊர்ஜிதம் செய்யப்படவில்லை. [உ]

## யுத்த நிறுத்தத்தை மீறி அரசு தாக்குதலைத் தீவிரப்படுத்தியது

### விடுதலைப் புலிகள் குற்றச்சாட்டு

யாழ்ப்பாணம், ஜூன் 14
"அரசும் நாமும் 13 ஆம் திகதி (புதன்கிழமை) நண்பகல் 12 மணி முதல் போர் நிறுத்தம் செய்ய இணங்கினோம். ஆனால் ஸ்ரீலங்கா அரசு போர் நிறுத்த உடன்பாட்டை மீறியதுடன் தாக்குதலை தீவிரப்படுத்தியுள்ளது. அத்துடன் தென்பகுதியிலிருந்து மேலும் சிங்களப் படைகளைக் கிழக்கில் குவித்து வருகிறது."

-இவ்வாறு விடுதலைப் புலிகள் அரசாங்கத்தின் மீது குற்றம் சுமத்தியிருக்கிறார்கள்.

விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி நேற்று விடுத்த அறிக்கையிலேயே இக்குற்றச்

(4ஆம் பக்கம் பார்க்க)

## 4,000 அரச துருப்புகள் கிழக்கு நோக்கி நகர்வு

கொழும்பு, ஜூன் 14
கிழக்கு மாகாணத்தில் சண்டை ஆரம்பித்த பின்னர் இலங்கை அரசு 4 ஆயிரத்துக்கும் மேற்பட்ட துருப்புக்களை அங்கு நகர்த்தி உள்ளது என ஏஜன்சிச் செய்திகள் தெரிவித்தன.

மேலதிகமாக அனுப்பப்பட்ட துருப்பினரில் அனேகமானோர் அம்பாறை, மட்டக்களப்பு மாவட்டங்களில் நிறுத்தப்பட்டுள்ளனர் என்றும் அந்தச்செய்திகள் கூறின.

இதேவேளை படை முகாம்கள் மீது தாக்குதல்கள் தொடர்ந்தால், கடுமையான பதில் தாக்குதல்கள் நடத்தப்படும் என்று இராணுவ அதிகாரி ஒருவர் தெரிவித்தார் என மற்றொரு செய்தி தெரிவித்தது. (ஒ)

## முச்சந்தி முரளி



அப்ப... குட்டையைக் குழப்பிறதிலை உவர் ரஞ்சனாரை விஞ்ச ஆள் இல்லை எண்டு சொல்லுங்கோ......!

## முஸ்லிம்கள் பலரும் உயிரிழந்தனர்

யாழ்ப்பாணம், ஜூன் 14
கிழக்கில் சிங்களப் படையினர் நடத்திய தாக்குதலில் பல முஸ்லிம் மக்கள் கொல்லப்பட்டிருப்பதாக விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியின் தலைமைச் செயற்குழு நேற்று விடுத்த அறிக்கை ஒன்றில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

ஸ்ரீலங்கா இராணுவம் ஆகாயத்திலிருந்து விமான மூலமும் ஹெலிகொப்டர் மூலமும் குண்டுவீசி பல இடங்களைத் தாக்கி வருகின்றது.

இது தவிர கடலிலிருந்தும் சிங்களப் படைமுகாம்களில் இருந்தும் பொதுமக்கள் வாழும் பகுதிகள் மீது ஷெல் தாக்குதல்கள் நடைபெற்று வருகின்றன,

சிங்களப் படைத் தாக்குதல்களால் கல்முனை, வாழைச்சேனைப் பகுதிகளில் பல முஸ்லிம் மக்கள் கொல்லப்பட்டுள்ளனர். அவர்களின் பல வீடுகள் சேதமாக்கப்பட்டுள்ளன.

- இவ்வாறு அந்த அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டிருந்தது. (உ)

## பழையபடி சோதனை!

யாழ்பாணம், ஜூன் 14
வவுனியா - ஈரற்பெரிய குளப்பகுதியில் நேற்று மீண்டும் வீதிச்சோதனை ஆரம்பமானது.

ஈரற்பெரியகுளத்திலுள்ள ஸ்ரீலங்கா இராணுவ முகாமைக் கடந்துவரும் அனைத்து வாகனங்களும் நேற்றுச் சோதனையிடப்பட்டன. முகாமுக்கு முன்னால் பயணிகள் பழையபடி இறக்கிநடக்க வைக்கப்பட்டனர்.

பயணிகள் பலர் இராணுவத்தினரின் மிரட்டலுக்கும் உள்ளாகினராம். (உ-9)

## மட்டக்களப்பு சந்திப்பு இன்று நடைபெறாது

யாழ்ப்பாணம், ஜூன் 14
விடுதலைப் புலிகளின் உயர் மட்டத் தலைவர்களுக்கும் அமைச்சர் ஹமீத்துக்கும் இடையில் இன்று மட்டக்களப்பில் நடைபெறுவதாக இருந்த சந்திப்பு இன்று நடைபெறமாட்டாது.

விவரம் அறிந்த வட்டாரங்கள் இத்தகவலைத் தெரிவித்தன.

கிழக்கில் தொடர்ந்து யுத்தம் நடைபெற்று வருவதால் இந்தச் சந்திப்பு உடனடியாக நடப்பதற்கு வாய்ப்புகள் இல்லை என்றும் தெரிவிக்கப்பட்டது.

நேற்று நண்பகல் முதல் யுத்த நிறுத்தத்தை அமுலுக்குக் கொண்டுவருவது என்றும் —

யுத்த நிறுத்தம் வந்த பின்னர் இன்று மட்டக்களப்பில்

(4 ஆம் பக்கம் பார்க்க]

## புலிகளுடன் பேச அரசு முயற்சி!

யாழ்ப்பாணம், ஜூன் 14
கிழக்கு மோதல்களை முடிவுக்குக் கொண்டு வந்து யுத்த நிறுத்தம் ஒன்றை ஏற்படுத்தும் நோக்கில் இலங்கை அரசின் உயர் பிரதிநிதிகள் விடுதலைப் புலிகளின் தலைவர்களுடன் தொடர்பு கொள்ள முயற்சித்து வருவதாக அறிய வருகிறது.

வடக்கில் தங்கியுள்ள விடுதலைப் புலிகளின் உயர் தலைவர்களுடன் பேசுவதற்கு அரசாங்க தலைவர்கள் முயன்று வருவதாகவும்-

ஆனால் யாழ்ப்பாணத்திற்கான தொலைபேசிச் சேவை சீர்கெட்டிருப்பதால் அவர்களினால் தொடர்பு கொள்ள முடியாதிருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டது. [உ]

## வவுனியா, ஒட்டுசுட்டான், மன்னார் பொலீஸ் நிலையங்களும் வீழ்ச்சி

யாழ்ப்பாணம், ஜூன் 14
வடக்கு- கிழக்கு மாகாணத்தில் அனேகமாக முழுப் பொலீஸ் நிலையங்களும் விடுதலைப்புலிகள் வசம் வீழ்ச்சி அடைந்துள்ளன.

நேற்று வவுனியா, ஒட்டுசுட்டான், முருங்கன், மன்னார் கோட்டை பொலீஸ் நிலையங்கள் உட்பட பெரும்பாலான பொலீஸ் நிலையங்கள் புலிகளின் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவரப்பட்டன.

நேற்றுக்காலை வவுனியா பொலீஸ் நிலையத்துக்குவந்த இராணுவத்தினரும், விமானப்படையினரும் அங்கிருந்த ஆயுதங்களை எடுத்துக் கொண்டு சிங்களப்பொலீஸா

[4 ஆம் பக்கம் பார்க்க]

## பிள்ளையார் கோவில் தகர்ப்பு

யாழ்ப்பாணம், ஜூன் 14
கிழக்கில் படையினர் மேற்கொண்ட தாக்குதல் நடவடிக்கைகளின் போது அம்பாறை மாவட்டத்தில் உள்ள பிள்ளையார் கோயில் ஒன்று குண்டுவைத்துத் தகர்க்கப்பட்டது.

—இவ்வாறு விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியின் தலைமைச் செயற்குழு விடுத்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருந்தது.

நூறுக்கு மேற்பட்ட அப்பாவித் தமிழ்மக்கள் வெட்டிக் கொல்லப்பட்டுள்ளனர்.

மத்திய (சென்றல்) முகாமைச் சுற்றியுள்ள பல பொது மக்கள் கொல்லப்பட்டுள்ளனர்.

பல பெண்கள் பாலியல்வன்முறைக்கு ஆளாக்கப்பட்டுள்ளனர் — இவ்வாறு மேலும் தெரிவிக்கப்பட்டது. (உ)

## சுப நேரம்

14- 6 - 90
வியாழக்கிழமை வைகாசி 31
சுபநேரம்!
07.23 -08.53
இராகுகாலம்
01.23 -02.53
இவை இரவுக்கும் பகலுக்கும் பொருந்தும்.

## 2 முகாம்கள் விடுதலை புலிகள் வசம்!

யாழ்ப்பாணம், ஜூன் 14
கல்முனை, கல்குடா இராணுவ முகாம்கள் விடுதலைப் புலிகள் வசம் வீழ்ந்தன.

கடும் சண்டைக்குப் பின்னர் இந்த முகாம்களில் இருந்த படையினர் பின் வாங்கி கடல் மார்க்கமாக கடற்படை கப்பல்களுக்குச் சென்று தஞ்சம் புகுந்ததாகத் தெரிவிக்கப்பட்டது. (உ)

## ரஞ்சனின் பேச்சு; புலிகள் அதிருப்தி

யாழ்ப்பாணம், ஜூன் 14
பெருந்தோட்டத் தொழில் துறை அமைச்சரும் துணை பாதுகாப்பு அமைச்சருமான ரஞ்சன் விஜேரத்னா நேற்று முன்தினம் நாடாளுமன்றத்தில் ஆற்றிய உரை குறித்து விடுதலைப்புலிகள் வட்டாரங்கள் பெரும் அதிருப்தி கொண்டிருப்பதாகத் தெரிய வருகிறது.

விடுதலைப்புலிகளை அவர் 'கிரிமினல்கள்' என்றுவர்ணித்திருப்பதும்—

விடுதலைப்புலிகளின் தலைவர் திரு. பிரபாகரனை திரு. வரதராஜப்பெருமாளுடன் ஒப்பிட்டுக் கூறியிருப்பதுமே புலிகளை கோபப்பட வைத்திருப்பதாக அறியவருகிறது.

விடுதலைப் புலிகளுடன் யாழ்ப்பாணத்தில் அமைச்சர் ஹமீத் சமரசப் பேச்சுக்களை நடத்திக்கொண்டிருந்த அதே வேளையில் கொழும்பு கோட்டே ஜெயவர்த்தனபுர நாடாளுமன்றத்தில் ரஞ்சன் இந்த உரையை நிகழ்த்திக் கொண்டிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. [உ]

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ் சிறுவிளம்பரம்

## விற்பனைக்கு

ஒல்லாந்திலிருந்து இறக்குமதி செய்த (Crimsonglobe) பீற்றூட் விதை விவசாய ஆய்வுகூட அனுமதிபெற்றது உயர் விளைச்சல் தரவல்லது. 200 கிராம் டின் ரூ 150.00 தேவைக்கு: பிள்ளையார் 259, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம். (3736)

வெளிநாட்டிலிருந்து கொண்டு வரப்பட்ட நல்ல நிலையிலுள்ள யன்மர் டீசல் என்ஜின் பொருத்தப்பட்ட Model 250 YDS Nishl Hatsu டைனமோ Amperes 250 7 H. P. R. P. M 3600, வெல்டிங் ட்றான்ஸ்போமர் பொருத்தப்பட்டது. விற்பனைக்குண்டு. தொடர்பு; கு. யோகராஜா, கொட்டுமலைக் கந்தசாமி கோவில், நாவலம்பதி அச்சுவேலி. (3738)

நல்ல நிலையிலுள்ள பாவித்த தட்டச்சு (Under Wood) இரண்டு பெயர்ப்பலகை (8'x3') அலுமினி உடன் விற்பனைக்குண்டு. இன்று முதல் ஞாயிறு வரை பகல் 10மணி தொடக்கம் 4மணி வரை பார்வையிடலாம். Thuraisingam 201 Off 3rd Cross Street, Jaffna. [13391]

## தேவை

G. C. E. O/L படித்த ஸ்ருடியோ வேலையில் ஆர்வமுள்ளவர்கள் தேவை. இருபாலரும் விண்ணப்பிக்கலாம். Quick Star 163, நாவலர் வீதி. யாழ்ப்பாணம். [13388]

## பயிலுநர் தேவை

பைண்டிங் பயிலுநர்கள் உடன் தொடர்பு கொள்ளவும். பயிற்சிக் காலத்திலும் பயிலுநர் வேதனம் உண்டு. செட்டியார் அச்சகம், 430, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம். [சி-4730]

## மணமகள் தேவை

கத்தோலிக்க வேளாள 30 வயதும் 5' 4'' உயரமும் இங்கிலாந்தில் கணக்காளராகத் தொழில் புரியும் நிரந்தர பிரஜா உரிமை உடைய மணமகனுக்கு இதே மதம் குலத்தைச் சேர்ந்த 28 வயதுக்கு உட்பட்ட தொழிற்தகைமை கல்வியறிவு பெற்ற நற்குணமுள்ள அழகிய பெண் தேவை. C/o உதயன், 729 [3795]

## WANTED

An enterprising young Lady Assistant is wanted for an educational institution. Knowledge of typing is an added qualification. Selection after an interview Salary negotiable. Please apply giving details of educational qualifications and other claims to:- No. 728, C/o Uthayan. Closing date 26-06-1990. [3787]

## இலவசம்

ஆறாவது ஆண்டை முன்னிட்டு 14-06 1990 தொடக்கம் அழகிய அல்பங்கள் இலவசம். 30, பிரதிகளுக்குமேல் சிறந்த கலர்ப்படங்களிற்கு முந்துங்கள் Quick Star, மனோகரா சந்தி. யாழ்ப்பாணம். (13389)

## புலமைப் பரிசில் பரீட்சை [ஆண்டு 5]

சிறப்பான பெறுபேற்றைப் பெற்ற நிறுவனத்தால் நடாத்தப்படும், புலமைப் பரிசில், பரீட்சை (ஏழாவது) 17-06-90 ஞாயிறு மு.ப. 10.30, பி.ப. 1.00, 3.00 நேரங்களில் நடைபெறும். பதிவு செய்யவும். வினாத்தாள் விளக்கம் 24-06-1990 ஞாயிறு மு.ப. 10.30க்கு வழங்கப்படும்சிறந்த மாணவருக்குப் பரிசில்கள் வழங்கப்படும். கிளை எவரஸ்ட், இணுவில் புதிய கல்வி நிலையம், கெங்காதரன் ஆஸ்பத்திரியடி யாழ்ப்பாணம். (3790)

பலரின் வேண்டுகோளுக்கிணங்க ஆண்டு-5 புலமைப் பரிசில் பரீட்சைக்கான பயிற்சி வகுப்புகள் சனி, ஞாயிறு நாட்களில் காலை 10.30-12.30 வரை நடைபெறவுள்ளன. ஆரம்பம் 16-06-1990 விபரங்களுக்கு; செல்வி எஸ். எஸ். ஐயர், 12 (36) வைமன் வீதி, நல்லூர். (13386)

## புலமைப் பரிசில் பரீட்சை 1990

ஒவ்வொரு சனிக்கிழமையும் ஆண்டு 5 இற்கான புலமைப் பரிசில் மாதிரிப் பரீட்சையின் 4 ஆம் தொடர் எதிர் வரும் சனி 16-06-1990 பி.ப. 3.00 — 6 00 வரை நடைபெறும். வெளி மாணவரும் தோற்றலாம். விபரங்களுக்கு எலைற் இன்ஸ்ரிரியூட், [வண்ணை தபால் கந்தோர் முன்பாக] 99, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம். (3793)

## காணவில்லை

சங்குவேலியில் வசிப்பவரும் மானிப்பாய் வேம்படி காளி கோவில் உடுவில் தெற்கு பிள்ளையார் கோவில் பூஜகரும் ஆகிய சுப்பிரமணிய ஐயர் (மோகன்) அவர்களுடைய A79529 இலக்கத்தையுடைய லுமாலா [Lumala] இன சைக்கிளை 9-6-90 அன்று மாலை மானிப்பாய் பாமஸிக்கு அருகாமையில் வைத்து காணவில்லை. தகவல் தருவோருக்குத் தகுந்த சன்மானம் வழங்கப்படும். (3792)

## தவறிவிட்டது

தரன் இன்டஸ்ரீஸ் 503, ஸ்ரான்லி றோட்டில் இருக்கும் எனது திறப்புக் கோர்வையும் லைசன்ஸ் புத்தகம், இன்சூரன்ஸ், கொமேசல் பாங் சேவிங் புத்தகம் அடையாள அட்டை, டயறிகள், ஸ்ராம்பேஸ் என்பன செம்மார் ஒழுங்கை, சப்பாத்துக் கடைக்கு முன்பாக தவறி விட்டது கண்டெடுத்தவர்கள் தயவு செய்து உதயன் காரியாலயத்தில் ஒப்படைக்கவும். [13392]

## வரலாறு

வெளிவந்து விட்டது! விற்பனையாகின்றது!! வரலாறு ஆண்டு II வரலாறு ஆண்டு 6 (புதிய பாடத்திட்டம்) ஆக்கியோன் ந. தர்மபாலன் சகல புத்தகசாலைகளிலும் பெற்றுக் கொள்ளலாம். (3789)

## இலங்கை தேசிய உப்புக் கூட்டுத்தாபனம் வட பிராந்தியம்

### கிடுகு விநியோகத்திற்கான கேள்விப் பத்திர அறிவித்தல்

**01 - 07 - 1990 — 31 - 12 - 1990**

வடபிராந்திய ஆனையிறவு குறிஞ்சாத்தீவு உப்பளங்களிற்கு மேற்படி காலப்பகுதிக்கு கிடுகு விநியோகிப்பதற்கான கேள்வி விண்ணப்பங்கள் கீழ்க் கையொப்பமிடும் என்னால் ஏற்றுக் கொள்ளப்படும்.

விண்ணப்பப்படிவங்கள் விநியோகிக்கும் கடைச்சித் திகதி; 20 - 06 - 1990 பி. ப. 2மணி

விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படும் கடைசித் திகதி; 27 - 06 - 1990 பி ப 2மணி

மேலதிக விபரங்களிற்கு கிழமை நாட்களில் கீழ்க் குறிப்பிடும் விலாசத்தில் என்னுடன் தொடர்பு கொள்ளலாம்

பிராந்திய முகாமையாளர் (வ. பி.)

இலங்கை தேசிய உப்புக் கூட்டுத்தாபனம்,
பிராந்திய காரியாலயம் (வ. பி.),
ஆனையிறவு [சி-4695]

வடக்கு - கிழக்கு மாவட்டரீதியில் நடந்த

# தமிழ்த்தினவிழா போட்டி முடிவுகள்

திருகோணமலை ஜூன் 14 திருகோணமலையில் இடம் பெற்ற மாவட்ட ரீதியான தமிழ் திறன் போட்டி முடிவுகள் வருமாறு:

## முதலாம் பிரிவு

**வாசிப்பு:**

1. பா செந்தூரன்- திரு/ விக்னேஸ்வரா மகாவித்தியாலயம்.
2. எஸ். கோபிகா- கல்முனை, கார்மேல் பாத்திமா கல்லூரி, 3. ம. பிரவீனன்- யாழ்/ மகாஜனாக் கல்லூரி.

**எழுத்து**

1. செல்வன் ஏ. எச். பெனாசிர்- நிந்தவூர், அல்மஸ்கர் வித்தியாலயம்,
2. செல்வி ந. நிலோஜினி- மட்/ மாமாங்கேஸ்வரர் வித்தியாலயம், 3 செல்வி சி. கிருஷாந்தனா- யாழ்/சுண்டிக்குளிமகளிர் வித்தியாலயம்

**பாவோதல்:**

1. செல்வன் அ. அன்ரனி யோசப்- திரு/ கும்புறுபிட்டி எம். பி. பாடசாலை,
2 செல்வி ஐ. இராதா யாழ்/ சீனன்கலட்டி, ஞானோதயா வித்தியாலயம், 3. செல்வன் கி. நேமிகரன்- மட்/ முதலைக்குடா,, மெ. மி. வித்தியாலயம்.

**நடனம் குழு:**

1. யா/ உடுவில் மகளிர் கல்லூரி, 2. மட்/ தாண்டவன் வெளி, றோ. க. ஆண்கள் பாடசாலை, 3 திரு/ புனித மரியாள் கல்லூரி.

**இசைப்பாட்டு:**

1. மட்/ ஆனைப்பந்தி பெண்கள் ம.வி, யாழ்/ இந்து மகளிர், ஆரம்பபாடசாலை,
3. மன்னார், நறுவிளங்குளம், றோ. க. பாடசாலை

## இரண்டாம் பிரிவு

**வாசிப்பு:**

1. செல்வன் யோ. சர்வேஸ்வரன்- மட்/ அமிர்தகழி, ஸ்ரீ சித்தி விநாயகர்வித்தியாலயம்
2. செல்வி செ. செல்வமரினா- யாழ்/ குடத்தனை றோ. க. பாடசாலை,
3. செல்வி ரி. கமலினி- கல்முனை/ தம்பிறுவில் மகாவித்தியாலயம்.

**ஆக்கம்:**

1 செல்வி கு. வித்தியானந்தி-யாழ்/ உடுப்பிட்டிமகளிர் கல்லூரி, 2. செல்வி இ. ஆர்த்திகா- மட்/ வின்சன்ட், மகளிர் கல்லூரி, 3. செல்வி பி. ஆன். அஜந்தினி- திரு/ புனித சவேரியார் மகாவித்தியாலயம்.

**பேச்சு**

1. செல்வி எம். எம். நபி சதுல்மனியா- கல்முனை/ மருமுத் மகளிர் கல்லூரி,
2. செல்வி அ. ஸ்ரீகார்த்திகா யாழ்/ சுண்டுக்குளி மகளிர் கல்லூரி.

**பாவோதல்**

1. செல்வி பி ஆன். அஜந்தினி- திரு/ புனிதசவேரியார் ம. வி, 2. செல்வி கே. தர்ஷினி- யாழ்/ சீனன்கலட்டி' ஞானோதயவித்தியாலயம், 3 செல்வி ஏ தினோஜா துஷானி- பட்டிருப்பு மகா வித்தியாலயம்.

**இசை தனி/ குழு**

1. யாழ்/ உடுவில் மகளிர் கல்லூரி, 2 யாழ்/ சுண்டிக்குளி மகளிர் கல்லூரி, 3. கல்முனை/ காரைதீவு, விபுலானந்த ம. வி.

**நடனம்:**

10 திரு/ புனிதமரியாள் கல்லூரி, 2. கல்முனை கார்மேல் பற்றிமாக் கல்லூரி
3. மன்னார் பற்றிமா மகா வித்தியாலயம்.

## மூன்றாம் பிரிவு

**பேச்சு**

1. செல்வி கி. வாசுகி- யாழ்/ வட இந்து மகளிர் கல்லூரி, 2 செல்வி எஸ். சுரேந்தினி - கல்முனை/ கார்மேல் பாத்திமாக் கல்லூரி, 3. செல்வி வி. நிரஞ்சினி- மட்/ பெரியகல்லாறு ம. வி.

**ஆக்கம்**

1. செல்வி இரா. சுவேந்திராணி - மட்/ முறக்கொட்டாஞ்சேனை இ. கி. மி கல்லூரி, 2 செல்வன் அ. அதிசயராசா - யாழ்/ மானிப்பாய் இந்துக் கல்லூரி, 3. செல்வி ப. யோகநாயகி - யாழ்/ செம்பியன்பற்று அ. த. க. பாடசாலை.

**கட்டுரை**

1. செல்வி ஞா. வாசுகி- கிளி/ புனித பத்திமா றோ. க. பாடசாலை, 2 செல்வி தி. மதிமோகனா- யாழ்/ கோப்பாய்க் கிறிஸ்தவக் கல்லூரி, 3. செல்வன் ஏ. மனோகரன் - மட்/ கஞ்தாவளை ம. வி.

**பாவோதல்குழு**

1. கல்முனை/ சாகிராக் கல்லூரி, 2. திரு/ஸ்ரீ சண்முக வித்தியாலயம், 3. கிளிநொச்சி கிளாவி றோ. க. பாடசாலை.

**இசைதனி/குழு**

1. யாழ்/ மெதடிஸ்த பெண்கள் கல்லூரி, 2. திரு/ உவர்மலை தமிழ் மகாவித்தியாலயம், 3. மட்/ சிசிலியா பெண்கள் ம. வி.

**வாத்தியம்**

செல்வி கு. ஷர்மிளா- யாழ்/ சுண்டிக்குளி மகளிர் வித்தியாலயம்.

## நான்காம் பிரிவு

**பேச்சு**

1. செல்வன் சி. கிருஷ்ணகுமார்-திரு/இந்துக் கல்லூரி, 2 செல்வன் எச். ஐ சம்சுதீன் - கல்முனை/ சாகிராக் கல்லூரி, 3. செல்வி அ சிவகாமி - கிளி/ பரந்தன் இந்து மகா வித்தியாலயம்.

**கட்டுரை**

1. செல்வி செ. புவனேஸ்வரி - கிளி/ இந்து ம. வி, 2. செல்வி க. மயூரதி - திரு/ஸ்ரீ சண்முகவித்தியாலயம், 3. செல்வன் ரி. குமார் - கமு/ திருக்கோவில் - அக்கரைப்பற்றுஇ கி. மி. பாடசாலை.

**ஆக்கம்**

1. செல்வி இ. இரத்தினேஸ்வரி - கிளி/ முருகானந்தா வித்தியாலயம், 2. செல்வன் மு. திருஞானம்: மன்/ முருங்கன் ம. வி, 3- செல்வன் வி. திரியம்பகன் திரு/புனித சூசையப்பர் கல்லூரி.

**பாவோதல்**

1. செல்வி இ. பிரனாந்தினி-யாழ்/ வேம்படி மகளிர் கல்லூரி, 2. செல்வன் உ. கஜேந்திரன் - திரு/ இ. கி.மி. இந்துக்கல்லூரி. 3. செல்வி ந. குலக்கொடி - மட்/முதலைக்குடா ஸ்ரீ கோபால் ம. வி.

**இசை நடனம்:**

1. யாழ்/ வட்டு இந்துக் கல்லூரி, 2. மன்/ புனித சவேரியார் வித்தியாலயம், 3. கமு/ காரைதீவு விபுலானந்த வித்தியாலயம்.

**கான வாத்தியம்:**

1. செல்வன் கே. நக்கீரன்- யாழ்/கொக்குவில் இந்துக் கல்லூரி, 2. செல்வன் என். செந்தில்குமார்- மட்/ புனித மைக்கல் கல்லூரி, 3 சி. ஜெயதீஷ்மன்- கிளி/ பளை மகாவித்தியாலயம்.

**குழு நடனம்:**

1. கமு/ கார்மேல் பாத்திமா கல்லூரி

## மேலதிகப் போட்டி

**பல்லியம்:**

1 யாழ்/ நடேஸ்வராக் கல்லூரி.

**நாடகம்:**

1. யாழ்/ வேம்படி மகளிர் கல்லூரி, மட்/ வின்சன்ட் மகளிர் கல்லூரி. 2 மன்/ முருங்கன் மகா வித்தியாலயம்

**நடனம்:**

1. யாழ்/ உடுவில் மகளிர் கல்லூரி, 2. கமு/ கம்பினுவில் மகாவித்தியாலயம், 3. திரு/ ஸ்ரீ சண்முக வித்தியாலயம்.

**வில்லுப்பாட்டு:**

1. திரு/ இ. கி. மி இந்துக் கல்லூரி, 2 யாழ்/ வடஇந்து மகளிர்கல்லூரி, 3. மட்/புனித திரேசா மகளிர் மகா வித்தியாலயம்.

**விவாதம்:**

1. கமு/ மருதமுனை சம்சுல் முஸ்லிம் மகாவித்தியாலயம். 2. மட்/காத்தான்குடி மத்திய மகா வித்தியாலயம், 3. கிளி/ திரேசா மகா வித்தியாலயம். [இ-155

# தொழிலாளரை உற்சாகமூட்ட விழாக்கள் அவசியமானவை

## சிமெந்து ஆலை விழாவில் உரை

காங்கேசன்துறை, ஜூன்14 ''தொழிற்சாலை வளர்ச்சிக்காக தம்மை அர்ப்பணித்து உழைக்கும்தொழிலாளர்களை உற்சாகப்படுத்த இப்படியான விழாக்கள் அவசியமானவை. ஆனால் கடந்த காலங்களில் இது போன்ற விழாக்களை நடத்தக் கூடிய சூழ்நிலை இருக்கவில்லை. தற்போது ஓரளவு சுமுகநிலை தோன்றியுள்ளதால் இவ்விழாவைக் கொண்டாட முடிகின்றது. இந்த நிலைக்கு வழி வகுத்த இளைஞர்களுக்கு நாம் நன்றி கூற வேண்டும்.

காங்கேசன்துறை சிமெந்துக் கூட்டுத்தாபன சிமெந்து ஆலை சேமநல தினவிழாவில் பிரதம அதிதியாகக் கலந்துரையாற்றிய தொழிற்சாலை நிர்வாக முகாமையாளர் திரு. எஸ். ஞானபண்டிதன் மேற்கண்டவாறு கூறினார்.

திரு. இ. பூரணலிங்கம் தலைமையில் வெள்ளி விழா அரங்கில் இடம் பெற்ற இவ் விழாவில் தொழிற்சாலை ஆளணி உத்தியோகத்தர் திரு. ஸ்ரீஸ்கந்தரராஜா உரையாற்றுகையில் கூறியதாவது:

தொழிற்சாலை வளர்ச்சிக்கு தொழிலாளர்கள் மட்டுமின்றி சுற்றாடலில் உள்ள பொது மக்களது பங்களிப்பும் அவசியமானது. தொழிற்சாலையால் சுற்றாடல் மாசுபடுகின்ற போதும் அதனை சகித்துக் கொண்டு வாழும் சுற்றாடலில் உள்ள மக்களை இப்படியான விழாக்களை நடத்தி உற்சாகப்படுத்தவேண்டும்.

மற்றும் பலர் உரையாற்றினர்.

விழாவை யொட்டி நடைபெற்ற போட்டிகளில் வெற்றியீட்டியோருக்கு திருமதி. ஞானபண்டிதன் பரிசில்கள் வழங்கினார். (இ 68) [உ-எ]

### கண்காட்சியும் ஒன்றுகூடலும்

யாழ்ப்பாணம், ஜூன் 14 சரவெட்டி உதவி அரசாங்க அதிபர் பிரிவு பயிலுநர் ஆசிரியர்களினால் ஒழுங்கு செய்யப்பட்ட கண்காட்சியும் ஒன்றுகூடல் நிகழ்ச்சியும் கடந்த 10 ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை தலைவர் கி. தர்மலிங்கம் தலைமையில் நடைபெற்றன. நிகழ்ச்சியில் கல்வி அதிகாரிகள், விரிவுரையாளர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர். பயிலுநர் ஆசிரியர்களின் கலை நிகழ்ச்சியும் நடைபெற்றது. (இ-7)

### நிறைவு விழா மலர் வெளியீடு

யாழ்ப்பாணம், ஜூன் 14 வடமராட்சி சுருக்கெழுத்துக் கழகத்தின் 5 ஆவது ஆண்டு நிறைவு விழாவும் மலர் வெளியீடும் அல்வாய் சின்னத்தம்பி வித்தியாலயத்தில் எதிர் வரும் 17 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு நடைபெறும். (இ-7)

## நன்றி நவில்லல்

### A. R. இராஜநாயகம்

(கொக்குவில் இந்துக் கல்லூரி, உப அதிபர்)

10 - 06 - 1990 அன்று நடைபெற்ற எமது குடும்பத் தலைவரின் இறுதிக் கிரியைகளில் கலந்துகொண்டோருக்கும், மலர்வளையங்கள் சாத்தியோருக்கும், அனுதாபச் செய்திகள் அனுப்பியோருக்கும், கொக்குவில் இந்துக் கல்லூரி அதிபர், ஆசிரியர்கள், மாணவர்களுக்கும், கொக்குவில் இந்துக் கல்லூரி பழைய மாணவர்களுக்கும், N. P. T. A. Benevolent Fund சங்கத்தினருக்கும் எமது நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

மனைவி, மக்கள், உறவினர்கள்.

655, K. K. S. வீதி,
யாழ்ப்பாணம். (3862)

17 வயதுக்கு உட்பட்டோர் கிரிக்கெட்

# சென்பற்றிக்ஸ் வெற்றி பெற்றது

யாழ்ப்பாணம் ஜூன் 14 யாழ்ப்பாணப் பாடசாலைகள் கிரிக்கெட் சங்கம் நடத்தும் 17 வயதுக்கு உட்பட்டோர் அணிகளுக்கு இடையிலான கிரிக்கெட் போட்டியில் சென். பற்றிக்ஸ் கல்லூரி மானிப்பாய் இந்துக் கல்லூரியை புள்ளிகள் அடிப்படையில் தோற்கடித்தது.

முதலில் ஆடிய சென் பற்றிக்ஸ் அணி ஒன்பது விக்கெட் இழப்பிற்கு 184 ஓட்டங்களை பெற்ற நிலையில் தனது முதல் இன்னிங்சை நிறுத்தியது. எரிக்நிர்மலன் 62, மைக்மோனோசன் 39, அன்ரனிப்பிள்ளை 29 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் செந்தில்நாதன் 5 விக்கெட்டுக்களையும்: ஜெகஜீவன் 3 விக்கெட்டுகளையும் கைப்பற்றினர்.

அடுத்து ஆடிய மானிப்பாய் இந்துக் கல்லூரி அணியினர் முதல் இன்னிங்சில் 89 ஓட்டங்களைப், பெற்றனர். சசிகுமார் 15, பிரதீபன் 13, புஸ்பகாந்தன் 13 ஓட்டங்களைப் பெற்றனர் மைக்மோனேசன் 5 விக்கெட்டுகளையும் சதானந்தன் 3 விக்கெட்டுக்களையும் கைப்பற்றினர்.

தொடர்ந்து ஆடப்பணிக்கப்பட்ட மானிப்பாய் இந்துக் கல்லூரி அணியினர் ஆட்ட நேர முடிவின் போது தமது இரண்டாவது இன்னிங்சில் 3 விக்கெட் இழப்பிற்கு 34 ஓட்டங்களைப் பெற்றனர். பிரபாகரன் ஆட்டமிழக்காமல் 13 ஓட்டங்களைப் பெற்றார்.

இப்போட்டிக்கு திருவாளர்கள் சி. நந்தகுமார், வை. ஜயந்நன் ஆகியோர் மத்தியஸ்தம் வகித்தனர். (மு)

## மெய்வல்லுநர் போட்டி

ஏழாலை சைவமகாஜன வித்தியாலய வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி இன்று வியாழக்கிழமை காலை 9 மணிக்கு வித்தியாலய மைதானத்தில் நடைபெறும்.

பாடசாலை அதிபர் திரு வீ. த. திருநாவுக்கரசு தலைமையில் நடைபெறும் இப்போட்டி நிகழ்ச்சியில் மருதனாமடம் உதவிக் கல்விப் பணிமனை பொது நிர்வாக கல்வி அதிகாரி திருமதி அ. துரைசிங்கம் பிரதம விருந்தினராகவும் மருதனாமடம் உ. க. பணிமனை திட்டமிடல் கல்வி அதிகாரி திரு. சு. இரத்தினராசா, விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி யாழ். மாவட்ட அரசியல் அமைப்பாளர் திரு ராஜன்ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகவும் கலந்து கொள்வார். (இ-7

# 31ஆம் நாள் நினைவஞ்சலி



உயர்திரு

## வேலுப்பிள்ளை தங்கேஸ்வரன்

(உடுப்பிட்டி ஈஸ்வரன் ஸ்ரோஸ் உரிமையாளர்)

மலர்வு: 17 - 10 - 1950
உதிர்வு: 15 - 05 - 1990

எம்முயிர் எம்மைவிட்டுப் போகும் வரை எம் நெஞ்சில் இருந்து உங்கள் நினைவு போகாது. எம் முன்னே நீ என்றும் நடமாடும் தெய்வமய்யா என்று நீ மீளவந்து எம் துயரைத் தீர்ப்பாயோ அன்று வரை எமக்கு ஆறாத் துயரமய்யா.

உமது பிரிவால் வாடும்:
பெற்றோர், அன்பு மனைவி, பிள்ளைகள்,
சகோதரங்கள், மைத்துனர்மார்,
உற்றார், உறவினர்,
அனைவரும் ஆத்மசாந்திக்காகப் பிரார்த்திக்கிறோம்.

இமையாணன்,
உடுப்பிட்டி. [3861]

# 3ஆம் ஆண்டு நினைவஞ்சலி



ஜனனம்: 03 - 05 - 1956

மரணம்: 18 - 05 - 1987

திதி: 14 - 06 - 1990

திருமதி

## ஜெயந்திதேவி யோகேஸ்வரன்

(ஆசிரியை உருத்திரபுரம் மகாவித்தியாலயம் கிளிநொச்சி)

வாசல்லே ஓடிச்சென்று — அம்மா
வரும் நேரம் — காத்திருக்க
ஆனையிறவில் அம்மா — அரண்காவல்
அம்பிற்கு — அடியோடு சாய்ந்த செய்தி கேட்டு
ஆண்டு மூன்றானது இன்று
கதியின்றி கண்ணீராய் வாழும் — உங்கள்
கருப்பையில் கனமாய் இருந்த — எங்களுக்கும்
எங்கள் அப்பாவுக்கும் விதி என்று — இறைவன்
ஏன் விதித்தான்?

அம்மா சாந்தியடைய
ஆண்டவன் இருவடிக்கு
கண்ணீர் சமர்ப்பணம்!

கணவன், பிள்ளைகள்,
தாய், சகோதரன், சகோதரிகள்,

கிறிஸ்தவக் கல்லூரி ஒழுங்கை,
கோப்பாய். (3885)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பொய்யாமொழி

**குறள்:**

துறைவன் துறந்தமை தூற்றா கொல் முன்கை
இறைஇறவா நின்ற வளை

**பொருள்:**

என் மெலிவால் முன்கையில் இறை கடந்து சுழலும் வளையல்கள், தலைவன் விட்டுப் பிரிந்த செய்தியைப் பலரறியத் தெரிவித்துத் தூற்றாமலிருக்குமோ?


# உதயன்

இல: 292/2, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி: 2288
14 - 06 - 1990 த. பெ இலக்கம் 23


## கலாசாரங்களும் மதங்களும்

இந்த நாட்டில் உள்ள ஒவ்வொரு சமூகமும் தனக்குள்ள கலாசார பாரம்பரியங்களைக் கைக் கொண்டு வாழ்வதற்கு இந்த நாட்டில் உரிமை உண்டு. மக்கள் தத்தமது மதங்களை விரும்பியவாறு கடைப்பிடித்து ஒழுகவும் உரிமை இருக்கிறது.

இவ்வாறு இந்த நாட்டின் ஜனாதிபதி திரு. ஆர். பிரேமதாசா, காலியில் நடந்த மாவட்ட மாநாட்டில் பேசுகையில் குறிப்பிட்டிருக்கிறார்

ஜனாதிபதி சொல்வது ஒன்றும் பொய்யில்லை சட்டப்படி, அரசமைப்புச் சட்டத்தின் பிரகாரம் கலாசாரங்களைப் பேணுவதிலோ, சமயங்களைக் கடைப்பிடிப்பதிலோ எவ்விதக்கட்டுப்பாடும் இல்லை என்பது உண்மையே. ஆனால் நடைமுறையில்...... அரசாங்கம் அளிக்கும் ஆதரவில் எல்லாம் தலைகீழ் தான்!

ஒருவன் தனது இனத்தின் கலாசாரத்தைப் பின்பற்றிப் பேணுவது அவனுக்குள்ள உரிமை. அது அவனது விருப்பத்தைப் பொறுத்தது. அவன் நினைத்தால் கலாசாரத்தைக் கைக்கொள்ளலாம், அதனை வளர்க்கவும் செய்யலாம். ஆகையால் ஒருவன் தனது கலாசாரத்தையோ, மதத்தையோ கடைப்பிடிப்பதற்கு உரிமை என்று வழங்கத் தேவையில்லை. அது தானாகவே வருவது. சுருக்கமாகச் சொல்வதானால் பிறப்பால் வந்த பிறப்புரிமை. ஆகையால் அதனை எவரும் தீண்டவோ, சீண்டவோ இயலாது.

குறிப்பிட்ட ஒரு கலாசாரத்தை கடைப்பிடிக்கக்கூடாது. அல்லது ஒரு மதநெறிப்படி வாழக்கூடாது என்று தடுக்கலாமே ஒழிய உரிமை வழங்கியிருப்பதாகக் கூற முடியாது.

ஒரு கலாசாரத்துக்கு அல்லது மதத்துக்கு தடை விதிப்பது என்பது நாகரீகம் அடைந்த உலகில் ஒவ்வாதது. சர்வதேச அடிப்படை, மனித உரிமைகள் சாசனத்துக்கு முரணானது. அதன் நிமித்தம் ஒரு மதவழிபாட்டுக்கு அல்லது கலாசார நடவடிக்கைகளுக்கு தடை விதிப்பது இப்போது சர்வதேச ரீதியாக மிகவும் குறைவு. சோவியத் யூனியன் கூட மத சுதந்திரம் இருக்கிறது. இஸ்லாமிய வைதீக நாடாக விளங்கும் ஈரானில் கூட கிறிஸ்தவர்கள் தமது மதநெறியைப் பின்பற்றி வாழ்கிறார்கள்.

அதனால், இலங்கையில் மத சுதந்திரம் இருக்கிறது, கலாசார சுதந்திரம் இருக்கிறது என்று பெருமைப்படுவதற்கு, சிறப்பித்துக் கூறுவதற்கு பெரிதாக ஒன்றுமில்லை.

பல்லின மக்கள் வாழும் நாட்டில் எல்லா மக்களின் கலாசாரங்களையும் வளர்க்கவும், பேணவும் அரசாங்கம் சம ஆதரவு, சம வாய்ப்பு வழங்குகின்றதா என்பதுதான் கேள்வி.

அதே போல பலசமய மக்கள் வாழும் இந்த நாட்டில் எல்லாச் சமயங்களையும் வளர்ப்பதற்கு அரசு சம வாய்ப்பும் ஆதரவும் வழங்குகிறதா? சிங்களவர்களையும் பௌத்தர்களையும் தவிர்ந்த எவரும் இல்லை என்றே சொல்வர் என்பது நிச்சயம்

இந்து சமய கலாசார அமைச்சு, முஸ்லிம் விவகார பண்பாட்டு அலுவல்கள் அமைச்சு என்று பெயருக்கு; வெளியில் அவை உண்டு என்று பெருமை அடிப்பதற்கு; துணை அமைச்சுக்கள் நியமிக்கப்பட்டுள்ளன என்பது உண்மைதான்.

ஆனால் இந்து சமயமும் தமிழர் கலாசாரமும், இஸ்லாம் மதமும் முஸ்லிம்களின் கலாசாரமும் வளர உரிய விகிதாசாரப்படியாவது அரசாங்க ஆதரவும் உதவியும் ஊக்குவிப்பும் உண்டா?

அப்படி இருந்திருப்பின் சிங்களக் கலாசாரமும், கலைகளும், பௌத்த மதமும் கண்ட வளர்ச்சி போல் ஏனைய கலாசாரங்களும், கலைகளும், மதங்களும் வளர்ந்திருக்குமே! தினை விதைத்தால் தானே தினையை அறுக்க முடியும்!

பௌத்தமும், சிங்கள கலாசாரமும், கலைகளும் அரியணை ஏற்றப்பட்டு செல்லப்பிள்ளைகளாக வளர்க்கப்படும் அதே வேளையில் —

ஏனைய கலாசாரங்களும், கலைகளும், மதங்களும் அவற்றுக்குரிய மக்களின் முயற்சியால், அவர்களின் பணத்தினால் தான் ஓரளவாவது வளர்ந்து தலை நிமிர்ந்து நிற்கின்றன. அரசாங்கம் வழங்கிய ஆதரவால் அல்லது உதவியால் அவை வளர்ந்து நிற்கவில்லை என்பதை அடித்துச் சொல்லலாம்.

உதாரணத்துக்கு வேறு எங்கும் போகத் தேவையில்லை. இப்போது அனேகமாக ஒவ்வொரு வீட்டிலும் பொழுது போக்குச் சாதனமாக வந்துவிட்ட தொலைக்காட்சியைப் பார்த்தால் போதும். சிங்கள, பௌத்த நிகழ்ச்சிகளுக்குக் கொடுக்கப்படும் பிரசித்தமும் ஏனைய மத, கலை நிகழ்ச்சிகளுக்குக் கொடுக்கப்படும் முக்கியத்துவமும் எந்த அளவில உள்ளன; எவ்வளவு இடைவெளி உண்டு என்பது எல்லோருக்கும் தெரிந்த ஒன்று — யானையும் பூனையும் போன்றது என்று!

எனவே சிங்கள கலை கலாசாரம், பௌத்த மதங்களைத் தவிர்ந்த ஏனைய கலை, கலாசாரங்கள், மதங்களைப் பேணவும் வளர்க்கவும் அரசு ஆற்றவேண்டிய பங்கை வழங்குவதே முக்கியம். அப்போது தான் பாகுபாடு, புறக்கணிப்பு என்ற நிலை நீங்கும் உரிமைகளை உரிய விதத்தில் அனுபவிக்கும் நிதர்சன நிலை தோன்றும்.

கிழக்கு மோதல்களால்

## கொழும்பு கையிருப்பு சந்தை விற்பனை வீழ்ச்சி அடைந்தது

கொழும்பு ஜூன் 14

கிழக்கு மாகாணத்தில் இடம்பெற்ற மோதல்கள் காரணமாக கொழும்பு கையிருப்புச் சந்தையில் விற்பனை வீழ்ச்சியடைந்தது.

திங்கள் விற்பனை ஒரு கோடி 50 லட்சம் ரூபாவாக இருந்தது. ஆனால் செவ்வாய்க்கிழமை இது 58 லட்சமாக வீழ்ச்சி கண்டது.

பங்குச் சந்தை விலைப்புள்ளியும் திங்கட்கிழமை 369 53 ஆக இருந்தது. ஆனால் செவ்வாய்க்கிழமை இது 355.08 ஆகக் குறைந்தது. (இ-எ)

## சனசமூக நிலைய ஆண்டுவிழா

யாழ்ப்பாணம் ஜூன் 14

கட்டைப்பிராய் கலைமணி சனசமூக நிலைய 40 ஆவது ஆண்டு நிறைவுவிழா இறுதி நிகழ்ச்சிகள் இம் மாதம் 23 ஆம்திகதி நடைபெறுகின்றன.

17-ஆம் திகதி காலை 10 மணிக்கு ஆண்களுக்கான 25 மைல் சைக்கிள் ஓட்டமும், காலை 7 மணிக்கு பெண்களுக்கான 10 மைல் சைக்கிள் ஓட்டமும் நடைபெறும்.

23ஆம் திகதி காலை 6மணிக்கு 15மைல் சைக்கிள் ஓட்டமும், 5 மைல் மரதன் ஓட்டமும் நடைபெறும். (இ-10)

யாழ். மாவட்டத்தில்

# பெரிய வெங்காய உற்பத்தியை அதிகரிப்பதற்கு நடவடிக்கை

யாழ்ப்பாணம் ஜூன் 14

எதிர்வரும் பெரும் போக காலத்தில் யாழ். மாவட்டத்தில் அம்பனை, உரும்பிராய் கரவெட்டி, அராலிப், பகுதிகளில் உலர் குமிழ் பாவித்து பெரிய வெங்காயச் செய்கையை அதிகரிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

பணப் பயிர்களில் ஒன்றான பெரிய வெங்காயம் வடக்கு-கிழக்கில் பெரும் அளவில் பயிரிடப்பட்டு வருகிறது.

திருகோணமலை; முல்லைத்தீவு, வவுனியா, கிளிநொச்சி யாழ்ப்பாணம் மாவட்டங்களில் 2800 மெற்றிக் தொன் பெரிய வெங்காயம் உற்பத்தி செய்யப்படும் என்றும் இதில் 1600 மெற்றிக் தொன் யாழ் மாவட்டத்தில் இருந்துபெறப்படும் என்றும் உத்தேசிக்கப்படுகிறது.

இதில் நுகர்வோர் பாவனைக்கு 50 மெற்றிக் தொன் போக மிகுதி ஏனைய மாவட்டங்களுக்கு அனுப்பப்படும் என்று வடக்கு-கிழக்கு மாகாண காணி விவசாய அமைச்சு அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (இ)

## குடும்பத் திட்ட தொண்டர் அறிமுக விழா

இலங்கை குடும்பத் திட்டச் சங்கத்தின் ஆதரவில் நடைபெறும் சாந்தை கிராமிய குடும்பத்திட்ட தொண்டர் அறிமுக விழாவும், கலை விழாவும் இன்று வியாழக்கிழமை மாலை 4 மணிக்கு சாந்தை சித்திவிநாயகர் சனசமூக நிலையத்தில் நடைபெறும்.

சாந்தை கிராமிய குடும்பத்திட்டச் செயற்குழுத் தலைவர் திரு. வ. சுப்பிரமணியத்தின் தலைமையில் நடைபெறும் இவ்விழாவில் பிரதம விருந்தினராக வடமாகாண தபால் திணைக்களப் பணிப்பாளர் திரு. எஸ். எம். சேது காவலர் கலந்து கொள்வார். [இ-7]

## கொடியேற்றம்

வட்டுக்கோட்டை மேற்கு அருள்மிகு முருகையா கோவில் வருடாந்த உற்சவம் இன்று வியாழக்கிழமை காலை 10 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து 10 நாட்கள் நடைபெறும். திருவிழாவின் இறுதி நாளன்று மகேசுவரபூசையும் நடைபெறும். (இ-7)

## வாசகர் திருமுகம்

### தபாலகத்தின் அவல நிலை

வட்டுக்கோட்டை தபால் நிலையம் 1 ஆம் தரத்தையுடையது. இதில் 30 இற்கு குறையாத ஊழியர்கள் கடமை புரிகின்றனர். கடந்த கால வன் செயல்களினால் இத் தபாலகம் சேதமடைந்துள்ளது. சேதமடைந்த இக் கட்டடம் இங்கு கடமை புரியும் ஊழியர்களின் மேல் எந்நேரமும் விழுந்துவிடக்கூடிய நிலையில் உள்ளது. யன்னல் கண்ணாடிகளின்றி காட்சியளிக்கின்றது.

போதிய தளபாடவசதியின்மையால் அதிகாரிகள், உத்தியோகத்தர்கள் நின்ற நிலையிலேயே கடமை புரிகின்றனர்.

இங்குள்ள மலசலகூடம் கூட சேதமடைந்துள்ளது. இத் தபாலகத்தை திருத்துவதற்கு இதுவரை காலமும் எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

இனிமேலாவது இதைத் திருத்த சம்பந்தப்பட்டவர்கள் நடவடிக்கை எடுப்பார்களா?

ரி• ராஜா,
வட்டுக்கோட்டை.

தொழில் நுட்பக் கல்லூரி -திறந்தபல்கலை

## புரிந்துணர்வுடன் வளங்களை பகிர்ந்து கொள்ள வலியுறுத்து

யாழ்ப்பாணம் ஜூன் 14

"யாழ். தொழில் நுட்பக் கல்லூரியும், திறந்த பல்கலைக்கழக யாழ்- பிரதேச நிலையமும் புரிந்துணர்வுடன் வளங்களைப் பகிர்ந்து கொள்ளும் அடிப்படையில் செயற்பட வேண்டும்"

தொழில் நுட்பக் கல்விப் பணிப்பாளர் திரு. டபிள்யூ. சமரசிங்கா இதனைத் தெரிவித்தார்

யாழ்ப்பாணம் விஜயம் செய்த அவர் இந்த இரு நிலையங்களுக்கும் இடையில் ஏற்பட்டுள்ள பிரச்சினை நிலை குறித்து கருத்து வெளியிடுகையிலேயே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

இரு நிலையங்களும் மாணவர்களின் நலனுக்காகவே இயங்குகின்றன. ஆரம்ப காலம் முதல் எமது வளங்களை திறந்த பல்கலைக்கழகம் பாவித்து வருகிறது.

எமது வகுப்பு அறையாயினும், உபகரணங்களையாவது இருபகுதியினரும் புரிந்துணர்வு அடிப்படையில் பகிர்ந்து பாவிக்க வேண்டும். போட்டி நிலவக்கூடாது. எமது வளங்களை நிரந்தரமாக அல்லாமல் இப்போதைய தேவைக்குப் பகிர்ந்து கொள்ளும் அடிப்படையில் அவர்களுக்குவழங்க வேண்டும் என்றார். (இ-3)

## பொன்னாடை

யாழ்ப்பாணம், ஜூன் 14

வண்ணை வடமேற்கு தாமரை வீதியில் அமைந்துள்ள கோட்டையம்பதி ஸ்ரீ சிவசுப்பிரமணியர் சுவாமி கோயில் அலங்கார உற்சவத்தை முன்னிட்டு கந்த புராண தொடர் விரிவுரை நடத்திய நல்லைக்குருமணியின் பிரதம சிஷ்யன் சானக தாவாரிதி கந்தர்மடம் பிரம்மஸ்ரீ சிவ, வை வித்தியானந்த சர்மாவுக்கு ஆலய பரிபாலனசபைத்தலைவர் திரு' குமாரவேலு பொன்னாடை போர்த்திக் கௌரவித்தார். (இ-7)

தொலைபேசி பரிவர்த்தனை நிலையக்

## கட்டடம் இவ்வாரம் பூர்த்தி

யாழ்ப்பாணம் ஜூன் 14

யாழ் மாவட்டத்துக்கு புதிதாக வழங்கப்படவுள்ள 500 தொலைபேசி இணைப்பு பரிவர்த்தனை நிலையத்துக்கான கட்டடவேலைகள் இவ்வாரத்தில் பூர்த்தியாகும் எனத் தெரிவிக்கப்பட்டது.

பண்ணை தொலைத்தொடர்பு பரிவர்த்தனை நிலையத்துக்கு அருகாமையில் அமைக்கப்பட்டு வந்த இந்த கட்டட வேலைகள் பூர்த்தியடைந்ததும், கொழும்பில் இருந்து இணைப்புக்கான கொன்ரயினர் கொண்டு வரப்படும் எனத் தெரிவிக்கப்பட்டது.

நிலத்துக்கு கீழான பரிசோதனை செய்யும் கேபிள் வேலைகள் பூர்த்தி அடைந்ததை அடுத்து இணைப்புக்கான கருவிகளைச் சீர் செய்யும் வேலைகள் தற்சமயம் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

பெரும் பாலும் அடுத்த மாத நடுப்பகுதிக்குள் புதிய இணைப்புக்கள் கிடைக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. (இ - 3)

உணவு முத்திரை:

## வெட்டி ஒப்படைக்க முடியாது

மட்டக்களப்பு, ஜூன் 14

மதிய உணவு முத்திரைகளை தனியாக வெட்டி கூட்டுறவுக்கடைகளில் ஒப்படைத்து பொருள்களைப் பெறமுடியாது. ஒரே தடவையில் ஒப்படைத்து அம்மாதத்திற்குரிய பொருள்களைப் பெற்றுக் கொள்ளலாம்.

இத்தகவலை மட்டக்களப்பு மாவட்ட சமுக சேவைகள் உதவிப்பணிப்பாளர் திரு. ஆர். தியாகராஜா தெரிவித்தார்

இம்முத்திரைகளை ஒப்படைத்து எக்காரணம்கொண்டும் பணம் பெற முடியாது என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (இ-5)

## விசேட சலுகை

கொழும்பு, ஜூன் 14

கஷ்டப்பிரதேசங்களில் பணிபுரியும் அரச ஊழியருக்கு விசேட சலுகை வழங்கும் திட்டம் ஒன்றை பொதுநிர்வாக, உள்நாட்டலுவல்கள் மற்றும் மாகாணசபை அமைச்சு தயாரித்துள்ளது.

இதுசம்பந்தமான சிபார்சுகள் அடங்கிய திட்டத்தை அமைச்சரவையின் அங்கீகாரத்திற்காக அமைச்சர் பெஸ்டஸ் பெரேரா சமர்ப்பிக்க இருக்கின்றார்.

அடுத்த அமைச்சரவைக் கூட்டத்தில் இது சமர்ப்பிக்கப்படும் என்று அமைச்சர் பெஸ்டஸ் பெரேரா தெரிவித்தார். (ஒ-எ)

## செய்திக்கொத்து

### கொடி தினம் மூலம் சேமிப்பு கணக்கு

கோப்பாய், ஜூன் 14

கோப்பாய் வடக்கு இந்து இளைஞர் மன்றம் அண்மையில் கொடி தினம்மூலம் சேர்ந்த பணம் மூலம் இப்பகுதியில் வாழும் 42 ஏழைகளின் பெயரில் சேமிப்பு கணக்கு ஒன்றை ஆரம்பித்துள்ளது. இவர்களுக்கான சேமிப்புப் புத்தகங்கள் அண்மையில் வழங்கப்பட்டன. (இ-72)

### விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன

மானிப்பாய் ஜூன் 14

இலங்கை திறந்த பல்கலைக் கழகத்தின் யாழ்ப்பாண நிலையத்தில் புடவைத் தொழில் நுட்பவியலில் சான்றிதழ் கற்கை நெறிக்கு தகுதியானவர்களிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

விண்ணப்ப முடிவு நாளை 15 ஆம் திகதி ஆகும் இப் பயிற்சி நெறியில் தெரிந்தெடுக்கப்படுபவர்களுக்கு நூல் உற்பத்தி, நெசவு, இரசாயன செய்முறை, உடுபுடைவைத் தொழில் நுட்பவியல் ஆகிய துறைகளில் பயிற்சிஅளிக்கப்படும். (இ-90)

### குடும்பஸ்தர் தற்கொலை

புங்குடுதீவு, ஜூன் 14

குடும்பத்தில் ஏற்பட்ட சச்சரவு காரணமாக புங்குடுதீவில் இளம் குடும்பஸ்தர் ஒருவர் கிருமி நாசினி அருந்தி தற்கொலை செய்து கொண்டார். இறந்தவர் 26 வயதான சின்னத்துரை சிவபாதம் என்று தெரிவிக்கப்படுகிறது. (ப-131)

படிந்த கல்சியம் காபனேற்று

## புதிய தொழிற்சாலை நிறுவ ஆரம்ப முயற்சி

யாழ்ப்பாணம், ஜூன் 14

யாழ்ப்பாணத்தில், உள்ளூர் மூலப்பொருளான சுண்ணாம்புக் கல்லைப் பயன்படுத்தி சிறிய அளவிலான இரசாயனத் தொழிற்சாலை ஒன்றை நிறுவுவதற்கான ஆரம்ப ஏற்பாடுகள் நடைபெற்று வருகின்றன.

வருடாந்தம் ஆயிரம் மெற்றிக் தொன் படிந்த கல்சியம் காபனேற்றையும் (Precipitated Calcium Carbonate 85 தொன் நீறாத சுண்ணாம்பையும் (QuickLime) பிரஸ்தாப தொழிற்சாலையில் உற்பத்திசெய்யத்திட்டமிடப்பட்டுள்ளது.

தொழிற்சாலையை அச்சுவேலியில் அமைக்க முடிவு செய்யப்பட்டிருப்பதாகவும், தொழிற்சாலையை நிறுவி உற்பத்தியைத் தொடங்குவதற்கான மூலதனச் செலவு ஒரு கோடி ரூபா என மதிப்பிடப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.

இலங்கையின் எந்தப் பகுதியிலும் இப்போது படிந்தகல்சியம் காபனேற்று உற்பத்தி செய்யும் தொழிற்சாலை இல்லை. வருடாந்தம் 2,500 மெற்றிக் தொன் வெளிநாடுகளில் இருந்து இறக்குமதி செய்யப்படுகிறது.

அச்சுவேலியில் அமைக்கப்பட இருக்கும் புதிய தொழிற்சாலையை வரையறுக்கப்பட்ட மக்கள் நிறுவனம் ஒன்றின் மூலம் ஸ்தாபிக்க முடிவு செய்யப்பட்டிருப்பதாகவும், அதன் தலைவராக அனுபவமுள்ள இரசாயனவியலாளர் ஒருவரையே சேர்க்க இருப்பதாகவும் ஆரம்ப நடவடிக்கைகளைக் கவனித்துவரும் அமைப்பாளர் உதயனுக்குத் தெரிவித்தார். (அ)

## கூடுதல் பாலைப் பெறுவதற்கு கால்நடைகளுக்குசத்துள்ளதீன்

### திருநெல்வேலியில் தயாராகிறது

யாழ்ப்பாணம், ஜூன் 14

பால் உற்பத்தியை அதிகரிக்கும் பொருட்டு கூடுதல் சத்துள்ள கால்நடைத் தீன் உணவை யாழ் மாவட்ட அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம் தயாரிக்க இருக்கிறது.

யாழ்ப்பாணம் திருநெல்வேலியிலுள்ள இந்தச் சங்கத்தின் தொழிற்சாலையில் தற்சமயம் உற்பத்தி செய்யப்படும் கால் நடை உணவு பழைய முறைப்படியே தயாரிக்கப்படுகிறது.

கால்நடைகளுக்கு கூடுதல் சத்தை அளிக்கக்கூடிய வகையில் புதிய முறையில் தற்பொழுது கால் நடை உணவு தயாரிக்கும் வேலைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இந்த உணவு வகை மூலம் கூடுதல் பாலைப் பெறமுடியும் என்று தெரிவிக்கப்பட்டது. (ஒ-3)

## மதிய உணவு நேரத்தில் வெளியே செல்வதற்குத் தடை

மட்டக்களப்பு, ஜூன் 14

மட்டக்களப்பு நகரில் உள்ள பிரபல மகளிர் பாடசாலைகளில் மதிய உணவு இடைவேளையின் போது மாணவிகள் வெளியே செல்ல அனுமதி மறுக்கப்படுவதாக பெற்றோர் மத்தியில் இருந்து புகார்கள் கிடைத்துள்ளன.

பாடசாலைச் சுற்றாடலில் உள்ள பெற்றோர்கள் கூட இதனால் தங்கள் பிள்ளைகளுக்குஉணவுப் பார்சல்களை எடுத்துச் செல்ல வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்படுகிறது.

இதுபற்றி மாவட்டக் கல்விப் பணிப்பாளர் திரு கே. சோமசுந்தரத்துடன் தொடர்பு கொண்டபோது அவர் தெரிவித்ததாவது;

மதிய உணவு இடைவெளி நேரத்தில் மாணவிகள் வெளியே செல்லுவதற்கு விதிக்கப்பட்டுள்ள தடை, கல்வித் திணைக்களத்தின் பணிப்புரை அல்ல. அது அந்தந்த பாடசாலைகளின் மேற்கொள்ளப்படும் நடவடிக்கையாகும் என்றார். (இ-ரி)

கல்முனையில்

## தமிழ் மொழித் தினவிழா

கல்முனை கோட்ட மட்டத்திலான தமிழ் மொழித் தின நிறைவு விழா வெகு சிறப்பாக நடந்தேறியது.

கல்முனை உதவிக் கல்விப் பணிப்பாளர் அலுவலகத்தினால் ஒழுங்கு செய்யப்பட்ட இந்த விழா, கல்முனை கார்மல் பாத்திமா கல்லூரி அரங்கில் நடைபெற்றது.

கல்முனை கோட்டத்திலுள்ள ஒன்பது கொத்தணிகளைச் சேர்ந்த 80 பாடசாலை மாணவர்கள் விழா தொடர்பான போட்டி நிகழ்ச்சிகளில் பங்கு பற்றினர்.

கல்முனை உதவிக் கல்விப் பணிப்பாளர் ஜனாப் ஐ. எம். இஸ்ஸதீன் தலைமையில் நடைபெற்ற இந்த விழாவில் அம்பாறை மாவட்ட கல்விப் பணிப்பாளர் திரு. எச். பீ. விஜேசூரிய பிரதம அதிதியாகவும், கல்முனை பிரதம கல்வி அதிகாரி அல் ஹாஜ் எம். பீ. எச். முகம்மது கௌரவ அதிதியாகவும் கலந்து கொண்டனர். (இ-14)

திருமலையில்

## பௌர்ணமிஇலக்கியகருத்தரங்கு

புதுமை நெஞ்சங்களில் பௌர்ணமி இலக்கியக் கருத்தரங்கு சமூகசேவை நிலையத்தில் இடம்பெற்றது.

பண்டிதர் சி. வயிரமுத்து தலைமையில் இடம்பெற்ற இக்கருத்தரங்கில் அண்மையில் வெளிவந்த 'திருகோணமலை' 'கோயிலும் அனையும்' 'கிராமத்து மண்கள் சிவக்கின்றன' ஆகிய மூன்று நூல்கள் விமர்சனத்துக்கு எடுத்துக் கொள்ளப்பட்டன.

கவிஞர் கி. முரளிதரன், கவிஞர் மலைமதி சந்திரசேகரம் தபாலதிபர் கே. கனகராசா ஆகியோர் நூல்களை விமர்சனம் செய்தனர்.

வரவேற்புரை திருமலை சுந்தரினால் நிகழ்த்தப்பட்டது. கவிஞர் செ. நவசோதிராசா நன்றியுரை வழங்கினார்.

## கண்டதும் கேட்டதும்

ஒரு "கப்" காப்பிக்காக பத்து ரூபா என்று நினைத்து நூறு ரூபாவை ஒரு பெண் கொடுத்து விட்டார். மாற்றி மீதப்பணம் தருவதாக நூறு ரூபாவுடன் சென்றவர் திரும்பிவரவே இல்லை. மாகோ ரயில் நிலையத்தில் யாழ்ப்பாணப் பெண் ஒருவருக்கு ஏற்பட்ட அனுபவம் இது.

யாழ்ப்பாணத்தில் இருந்து கொழும்பு செல்லும் ரயில் பிரயாணிகளுக்கு வவுனியாவுக்கு அப்பால் இப்படி எத்தனையோ கசப்பான அனுபவங்கள் ஏற்படுகின்றன. இதனால் தான் பெரும்பாலானவர்கள் ரயில் பயணத்தின் போது பணத்தை சில்லறையாகக் கொண்டு செல்வது உண்டு

பிரஸ்தாப பெண்ணுக்கு இது தெரியாது போலும்!

— செய்திலோலன்

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# மலையகத் தமிழர் பிரச்சினை; இ. தொ. கா புதிய திட்டம் தயார்

## விரைவில் இலங்கை அரசுக்கு தெரிவிக்கும்

கொழும்பு, ஜூன் 14 இலங்கையில் இந்தியப் பாஸ்போர்ட்டுகளுடன் தங்கி இருக்கும் மலையகத் தமிழரை நாடு கடத்தும் பிரச்சினையைத் தீர்க்க புதிய திட்டம் ஒன்றை இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் தயாரித்துள்ளது.

இந்தத் திட்டத்தின் கீழ் பின்வரும் ஆலோசனையை இ. தொ. கா. இலங்கை அரசுக்கு தெரிவிக்க இருக்கிறது எனத் தெரிய வருகிறது.

பல்வேறு உடன்படிக்கைகளின் கீழ் ஒப்புக்கொள்ளப்பட்டபடி 4 லட்சத்து 69 ஆயிரம் தோட்டத் தொழிலாளருக்கு இலங்கைப் பிரசா உரிமை வழங்கும் விஷயத்தை இலங்கை அரசு முதலில் பூரணமாக்க வேண்டும்.

இதுவரை 2லட்சத்து 20ஆயிரம் தோட்டத் தொழிலாளருக்கே இலங்கைப் பிரசா உரிமையை அரசு வழங்கியுள்ளது.

''இலங்கை அரசு தான் ஒப்புக்கொண்டபடி பிரசா உரிமை வழங்கும் வேலையை பூரணப்படுத்தினால் இந்தியப் பாஸ்போர்ட் வைத்துள்ள பெரும்பாலோர் இலங்கைப் பிரசா உரிமையை பெற்று விடுவர்.''

இப்படி இ தொ. கா. வின் ஆலோசனை அமைகிறது. (ஒ-3)

புதிதாக

## சனத்தொகை கணக்கெடுப்பு நடத்துமாறு கோரிக்கை

கொழும்பு ஜூன் 14 இலங்கையின் சனத்தொகைக் கணக்கெடுப்பு புதிதாக நடத்தப்பட வேண்டும்.

புதிய சனத்தொகையின் அடிப்படையிலேயே காணி மற்றும் தொழில் வாய்ப்புக்கள் வழங்கப்படவேண்டும் என்று இலங்கைத் தோட்டத் தொழிலாளர் சங்கம் அரசாங்கத்தை கேட்டுள்ளது.

சங்கத்தின் பொதுச் செயலாளர் திரு. ஏ. இராமையா இது தொடர்பாக ஜனாதிபதி பிரேமதாஸாவுக்குக் கடிதம் ஒன்றை அனுப்பிவைத்துள்ளார்.

கடைசியாக 1981 இல் சனத்தொகை கணக்கெடுப்பு இடம் பெற்றது.

அந்த அடிப்படையில் இப்போது காணிப்பங்கீடு தொழில் நியமனங்கள் ஆகிய வற்றை வழங்குவது உரியவர்களுக்குக் கிடைக்க வேண்டிய வாய்ப்பை பறிப்பதாகும்.

இப்படி அந்தக் கடிதத்தில் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. (இ-எ)

மாகாணசபை தொடர்பாக

## உயர்நீதிமன்றத்தில் இரண்டு சட்டமூலங்கள் தாக்கல்

கொழும்பு, ஜூன் 14 உயர் நீதிமன்றத்தில் கடந்த செவ்வாய்க்கிழமை இரண்டு சட்டமூலங்கள் தாக்கல் செய்யப்பட்டன.

ஒன்று 1989 ஆம் ஆண்டின் 42 ஆம் இலக்க மாகாணசபைகள் சட்டத்தைத்திருத்துவது இரண்டாவது 1988 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க மாகாணசபைத் தேர்தல்கள் சட்டத்தைத் திருத்துவது.

இந்த இரண்டுசட்ட மூலங்களும் அரசியல் யாப்புக்கு முரணானவையா என்பதை தீர்மானிக்கும்படி உயர்நீதிமன்றத்தை அரசாங்கம்கேட்டிருந்தது.

நீதியரசர்கள் எச். ஏ. ஜி. டி. சில்வா, டாக்டர். ஏ. ஆர் பி. அமரசிங்க ஆர். என். எம். தீனரத்தின ஆகியோர் முன்னிலையில் சட்டமூலங்கள் பரிசீலனைக்குஎடுக்கப்பட்டன.

இச்சட்டமூலங்களுக்கான ஆட்சேபனைகளை யாழ். மாவட்ட ஈ. பி. ஆர். எல். எப். எம் பி திரு. வி. கே. யோகசங்கரி தாக்கல் செய்திருந்தார். (இ-எ)

## உடனடிப் பாஸ்போட் மூலம் 6 மாதத்தில் ரூபா 21லட்சம்

கொழும்பு ஜூன் 14 விண்ணப்பம் செய்த அதே தினத்தின் பாஸ்போர்ட் பெற்றுக்கொள்ளும் திட்டத்தின் கீழ் குடிவரவு குடியகல்வு திணைக்களம் இம்மாதத்தின் முதல் ஆறு மாதங்களிலும் 21 லட்சம் ரூபாவை வருமானமாக பெற்றது.

விண்ணப்பத்துடன் மேலதிகமாக 500 ரூபா கட்டணமாகச் செலுத்துபவர்களுக்கு அதே தினத்தில் பாஸ்போர்ட் இத்திட்டத்தின் கீழ் கிடைக்கிறது. (இ-எ)

## சாரணியர் குழுக்களிடையே கிராமிய நடனப் போட்டி

யாழ்ப்பாணம், ஜூன் 14 யாழ். மாவட்டசாரணியர் குழுக்களுக்கிடையே கிராமிய நடனப்போட்டி ஒன்று வேம்படி மகளிர் கல்லூரியில் நடைபெற்றது. இதில் கிளிநொச்சி வட்டுக்கோட்டை, பருத்தித்துறை பகுதிகள் உள்ளிட்ட 14 பாடசாலைகளைச்சேர்ந்த சாரணியர் குழுக்கள் பங்குபற்றின.

நடுவர்களாக செல்விகள் திருநாவுக்கரசு, நித்தியானந்தம், இராசநாயகம்ஆகியோர் கலந்து கொண்டனர்.

மீனவர்களின் நாளாந்த வாழ்க்கையை எடுத்துக் காட்டியபருத்தித்துறைமெதடிஸ்த பெண்கள் உயர்தர கல்லூரி சாரணியரின் நடனம் முதலிடத்தைப்பெற்றது.

வட்டுக்கோட்டை இந்துக் கல்லூரி சாரணியரின் செம்பு நடனம் 2ஆம் இடத்தையும், வேம்படி மகளிர் கல்லூரி சாரணியரின் மீனவநடனம் 3 ஆம் இடத்தையும் பெற்றன.

இக் கிராமியநடனப் போட்டிகளை யாழ். மாவட்ட சாரணியர் ஆணையாளர் திருமதி ரீ. அரிபரத்தினம் ஒழுங்கு செய்திருந்தார். (இ-7)

## யாழ். இந்துக் கல்லூரி வெற்றி

யாழ்ப்பாணம் ஜூன் 14 பதினைந்து வயதுக்கு உட்பட்டோர் அணிகளுக்கு இடையிலான சிநேகபூர்வ கிரிக்கெட் போட்டியில் கொக்குவில் இந்துக் கல்லூரியை யாழ் இந்துக் கல்லூரி 85 ஓட்டங்களால் தோற்கடித்தது.

முதலில் ஆடிய யாழ் இந்து அணி தனது முதல் இன்னிங்ஸில் 141 ஓட்டங்களைப் பெற்றது. பார்த்திபன் 41, விஜிதன் 25, ஓட்டங்களைப் பெற்றனர்.

அடுத்து ஆடிய கொக்குவில் இந்து அணி தனது முதல் இன்னிங்ஸில் 81 ஓட்டங்களைப் பெற்றது. பார்த்திபன் 4 விக்கெட்டுகளையும், அகிலன் 3 விக்கெட்டுகளையும், அபிராம் 2 விக்கெட்டுகளையும் கைப்பற்றினர்.

தொடர்ந்து ஆடிய யாழ். இந்து அணி 4 விக்கெட் இழப்பிற்கு 115 ஓட்டங்களை பெற்ற நிலையில் தனது இரண்டாவது இன்னிங்ஸை முடித்துக் கொண்டது. அமலன் 59 ஓட்டங்களை பெற்றார். கொக்குவில் இந்து அணி இரண்டாவது இன்னிங்ஸில் 90ஓட்டங்களுக்கு ஆட்டமிழந்தது. ஜெயநிதி 4 விக்கெட்டுகளையும் அகிலன் 3 விக்கெட்டுகளையும் கைப்பற்றினர். (இ-மு)

## பேருட் செல்ல இருந்த பெண் கைது

கொழும்பு, ஜூன் 14 பேருட் செல்லவிருந்த இலங்கைப் பெண் ஒருவரை கட்டுநாயக விமான நிலைய பாதுகாப்பு ஊழியர்கள் கடந்த திங்கட்கிழமை கைது செய்தனர்.

அவரிடம் இருந்த போலி பாஸ்போர்ட்டும் கைப்பற்றப்பட்டது.

விசாரணைக்காக அவர் இரகசியப் பொலீஸாரிடம் ஒப்படைக்கப்பட்டார். (இ-எ)

## மேஜர் முரளி நினைவு கேடயம் புதிர் போட்டி முடிவுகள்

கைதடி ஜூன் 12 மேஜர் முரளி நினைவு கேடயத்துக்கான கோட்ட மட்டத்திலான புதிர்ப் போட்டியில் தென்மராட்சிக் கோட்டத்தில் பளை மகா வித்தியாலயத்தைச் சேர்ந்த மாணவன் செல்வன் கு. குணரூபன் 17 புள்ளிகளைப் பெற்று சாதனை நிலை நாட்டினார்.

12 பாடசாலைகள் பங்கு கொண்ட இப்போட்டியில் 30 புள்ளிகளைப் பெற்று கைதடி முத்துக்குமாரசாமி மகா வித்தியாலயம் முன்னணி வகிக்கிறது.

மாவட்ட போட்டிக்கு தெரிவு செய்யப்பட்ட ஏனைய ஐந்து பாடசாலைகள் சாவகச்சேரி டிறிபேக் கல்லூரி 29 புள்ளிகள், உஷன் இராமநாதன் மகா வித்தியாலயம் 24 புள்ளிகள், பளை சமா வித்தியாலயம் 22 புள்ளிகள், மீசாலை விக்னேஸ்வரா ம. வி. 20 புள்ளிகள், வரணி ம. வி. 14 புள்ளிகள்

தென்மராட்சி மாணவர் அமைப்பு பொறுப்பாளர் திரு. ரஞ்சன் தலைமையில் சாவகச்சேரி டிறிபேக் கல்லூரியில் நடைபெற்ற இப்போட்டியில் மக்கள் முன்னணியின் தென்மராட்சி அரசியல் பொறுப்பாளர் திரு. பாப்பா கலந்து கொண்டார்.

இப்போட்டியின் அறிவிப்பாளர்களாக ஆசிரியர்கள் நாகேஸ்வரன், அன்ரன், சந்திரசேகரம் ஆகியோரும் பதிவாளர்களாகவும் நேரக் கணிப்பாளர்களாகவும் ஆசிரியர்கள் ஞானலிங்கம், முருகேசு ஆகியோரும் கலந்து கொண்டனர். தென்மராட்சி கலை கலாசாரப் பொறுப்பாளர் திரு. உலகநாதன் போட்டியை நெறிப்படுத்தினார். (இ-74)

## சந்தை விலைகள்

சுன்னாகம், திருநெல்வேலி, யாழ்ப்பாணம் சந்தைகளில் நேற்றைய மரக்கறி விலைகள் — கிலோ அடிப்படையில்;

| | சுன்னாகம்: | திருநெல்வேலி: | யாழ்ப்பாணம்: |
|---|---|---|---|
| கத்தரி | ரூ. 8 00-10 00 | ரூ. 8.00-10.00 | ரூ. 12.00-16.00 |
| வாழைக்காய் | ரூ. 8 00-10.00 | ரூ. 8.50-10.00 | ரூ. 8.00-10.00 |
| பயிற்றங்காய் | ரூ. 22.00-24.00 | ரூ. 18.00-20 00 | ரூ. 20.00-24 00 |
| பாகற்காய் | ரூ. 18.00-20 00 | ரூ. 16 00-18 00 | ரூ. 20.00-24.00 |
| கோவா | ரூ. 12.00-16.00 | ரூ. 14.00-15 00 | ரூ 16 00-18.00 |
| லீக்ஸ் | ரூ. 20.00-22 00 | ரூ. 22 00-24.00 | ரூ 20.00-24.00 |
| கரட் (மலைநாடு) | ரூ. 18.00-20.00 | ரூ. 20.00-22.00 | ரூ. 20.00-24.00 |
| பீற்றூட் | ரூ. 10 00-12 00 | ரூ. 18.00-20.00 | ரூ. 18.00-20.00 |
| பீன்ஸ் | ரூ. 22.00-24 00 | ரூ. 28 00-30.00 | ரூ. 26.00-28 00 |
| பூசணி | ரூ. 6 50- 7 50 | ரூ. 5 50- 6.00 | ரூ. 6.00- 8 00 |
| பச்சைமிளகாய் | ரூ 22 00-24 00 | ரூ. 22.00-25 00 | ரூ. 20.00-22.00 |
| வெங் (வேதாளம்) | ரூ. 45.00-50 00 | ரூ 45.00-42 00 | ரூ. 52 00 54 00 |
| வெங்காயம் (சிறிய) | ரூ. 38 00-42 00 | ரூ. 40.00-42 00 | ரூ. 40.00-45.00 |
| உருளைக்கிழங்கு | ரூ. 30.00-32 00 | ரூ. 32.00-34 00 | ரூ. 32.00-34.00 |
| மரவள்ளிக்கிழங்கு | ரூ. 10.00-12 00 | ரூ. 10.00-12 00 | ரூ. 10.00-12.00 |
| வெண்டைக்காய் | ரூ. 18 00-20 00 | ரூ. 20.00-22 00 | ரூ. 20.00-24.00 |
| செத்தல் | ரூ. 62.00-65 00 | | |

## தப்பபிப்பிராயத்தை ஏற்படுத்தும் முயற்சியே வாகன கடத்தல்

### செட்டிகுளம் சம்பவம் குறித்து புலிகள் பிரமுகர் கருத்து

வவுனியா. ஜூன் 14 விடுதலைப் புலிகளுக்கும் மக்களுக்கும் இடையே ஒரு தப்பான அபிப்பிராயத்தை ஏற்படுத்தும் முயற்சியே கடந்த 8 ஆம் திகதி செட்டிகுளம் பகுதியில் வைத்து வட மேல் மாகாண சபை உறுப்பினர் ஒருவரின் பஜரோ வாகனம் கடத்தப்பட்ட சம்பவம் ஆகும்.

விடுதலைப் புலிகளின் வன்னிப் பிராந்திய அரசியல் பொறுப்பாளர் சந்திரன் செய்தியாளர்களிடம் மேற்கண்டவாறு கூறினார்.

கடத்தப்பட்ட வாகனத்தைக் கண்டுபிடிப்பதில் புலிகள் தீவிரமாக ஈடுபட்டுள்ளனர் என்று தெரிவித்த அவர் மடுக்கோவிலை நோக்கி தென்பகுதியிலிருந்து வருபவர்களுக்குத் தம்மால் இயன்ற ஒத்துழைப்பை வழங்கத் தயாராக இருப்பதாகவும், இக் கடத்தல் சம்பவம் காரணமாக எவரும் அச்சமடையத் தேவையில்லை எனவும் தெரிவித்தார்.

இத் தகைய தீய சக்திகளை நன்கு இனங்காண்பதற்கு புலிகளுடன் ஒத்துழைக்க பொது மக்கள் முன்வரவேண்டும் எனவும் திரு. சந்திரன் கேட்டுக் கொண்டார்.

இதே வேளையில், இந்த வாகனக் கடத்தல் சம்பந்தமாக புலிகளின் வவுனியா தலைவர்களுடன் பேச்சுவார்த்தை நடத்துவதற்காக வந்திருந்த வடமத்திய மாகாண சபையின் உறுப்பினரான திரு. நிசங்கதிசாநாயக்க, வடமேல் மாகாணசபை உறுப்பினரான திரு. வர்ணகுலசூரிய ஜோர்ஜ் பெர்னாண்டோ ஆகியோரையும் அவர் சந்தித்துப் பேசினார்.

கடத்தப்பட்ட வாகனத்தைக் கண்டு பிடிப்பதற்காக புலிகள் தம்மால் ஆன முயற்சிகள் அனைத்தையும் மேற்கொண்டுள்ளதாகவும் திரு. சந்திரன் மாகாணசபை உறுப்பினர்களிடம் தெரிவித்தார்.

இதனிடையில் வாகனக் கடத்தல் சம்பந்தமாக கருத்து தெரிவித்த திரு. ஜோர்ஜ் பெர்னான்டோ சாரம் ஷேர்ட் அணிந்திருந்த ஆயுதம் தாங்கிய ஆறு பேர் அடங்கிய கோஷ்டி ஒன்றே, தாங்கள் விடுதலைப் புலிகள் எனக் கூறிக் கொண்டு வாகனத்தைக் கேட்டதாகவும், தாம் அவர்களுடன் புலிகள் இவ்வாறு செய்யமாட்டார்கள் எனக் கூறி வாதிட்டதாகவும் தெரிவித்தார்.

வாக்கு வாதத்தைத் தொடர்ந்து கோஷ்டியினரில் ஒருவர் தமது மகளை நோக்கித் துப்பாக்கியினால் குறிவைத்துப் பயமுறுத்தியே தம்மிடமிருந்து வாகனத்தைப் பறித்ததாகவும் அவர் கூறினார். (இ-164)

வவுனியா- -

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

ரையும் தம்முடன் கூட்டிச் சென்றனர். தற்போது வவுனியா பொலீஸ் நிலையம் புலிகளின் கட்டுப்பாட்டில் இருந்து வருகிறது.

மன்னார் கோட்டையில் 165 பொலீஸார் புலிகளிடம் சரண் அடைந்தனர். இவர்களில் 125 பேர் சிங்களவர்கள் முருங்கனில் சரண் அடைந்த 65 பொலீஸாரில் 62 பேர் சிங்களவர்கள். (இ)

## சரியான உணவுப் பழக்கம் மூலம் சுகாதார பிரச்சினையை தீர்க்கலாம்

### கருத்தரங்கில் வைத்திய அதிகாரி

காரைநகர் ஜூன் 14 மக்கள் தமது வாழ்க்கை முறைகளை மாற்றி அமைப்பது மூலமும் சரியான உணவுப்பழக்க வழக்கங்கள் மூலமும் சுகாதாரப் பிரச்சினைகளைத் தீர்க்க முடியும் இது வெற்றி பெற மக்களின் ஒத்துழைப்பும் பங்களிப்பும் அவசியம்.

ஊர்காவற்றுறை சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் (திருமதி) ஜி. கந்தசாமி மேற்கண்டவாறு கூறினார்.

காரைநகர் கிழக்கு அழகாபுரி கிராமமுன்னேற்றச் சங்க மண்டபத்தில் நடைபெற்ற சுகநலக் கருத்தரங்கில் அவர் உரையாற்றினார்.

சங்கத்தலைவர் திரு. அ. ஜெயரெத்தினம் இதற்குத் தலைமை வகித்தார்.

ஊர்காவற்றுறை சுகாதார வைத்திய அதிகாரி, மேற்பார்வைச் சுகாதாரப் பரிசோதகர், மேற்பார்வைக் குடும்பநலசேவையாளர், சுகாதாரப் பரிசோதகர்கள், குடும்பநலசேவையாளர், ஊர்காவற்றுறை அபிவிருத்தி உத்தியோகத்தர், கிராம முன்னேற்றச் சங்க உறுப்பினர்கள் தாய்மார் ஆகியோர் கருத்தரங்கில் பங்கு பற்றினார்கள்.

ஊர்காவற்துறை மேற்பார்வைச் சுகாதாரப் [illegible]

திரு. ஏ. செல்லையா தமது உரையில் எமது பகுதியில் 50 சத வீத மானோர்மலசல கூடம் பாவிப்பதில்லை 60சத வீத மான மக்களுக்கு துப்பரவான குடி தண்ணீர் வசதி இல்லை. இதனால் வயிற்றோட்டம் புழுவியாதிகள் முக்கியமான பிரச்சினைகளாக வுள்ளன

30 சதவீத மான பாடசாலைப்பிள்ளைகள் போஷாக்கின்மையால் பாதிக்கப்பட்டுள்ளனர். 50 சதவீதமான கர்ப்பவதிகளும் பாலூட்டும் தாய்மார்களும் இரத்தச் சோகைக்கு ஆளாகியுள்ளனர் 90 சதவீதத்துக்கு மேற்பட்ட பாடசாலை மாணவர்கள் பல் வியாதிகளால் பாதிக்கப்பட்டுள்ளனர் 20 25சதவீத மான சிசுக்கள்நிறைகுறைவாகபிறக்கிறார்கள் இப் பிரச்சினைகளைத் தீர்க்க மக்களின் பூரண ஒத்துழைப்பு தேவை

இப்படி அவர் கூறினார்.

ஊர்காவற்றுறை மேற்பார்வைக் குடும்பநலசேவையாளர் திருமதி அன்னம்மா மற்றும் சுகாதாரப் பரிசோதகர் குடும்பநல சேவையாளர் ஆகியோரும் உரையாற்றினர்.

## கனகராயன்குளம் கொத்தணி மெய்வல்லுனர் போட்டிகள்

யாழ்ப்பாணம், ஜூன் 5 கனகராயன்குளம் கொத்தணி பாடசாலைகள்மட்டத்தில் இல்ல மெய்வல்லுனர் போட்டி கனகராயன் குளம் மகாவித்தியாலய மைதானத்தில் நடைபெற்றது.

இதில்மஞ்சள்இல்லம்1 ஆவது இடத்தையும், சிவப்பு இல்லம் 2 ஆவது இடத்தையும், நீல இல்லம் 3 ஆவது இடத்தையும் பெற்றன.

மேற்படிபோட்டியில்சிறந்த விளையாட்டு வீரர்களுக்கான [illegible]

அ. த க. பாடசாலை மாணவர்கள்பெற்றுக்கொண்டனர்.

இந்த அறுவர்வருமாறு:- பி. சிறிதரன் (19வயதின்கீழ்), பொ ரகுநாதன் (17 வயதின் கீழ்,) ஜெ. ஜெயந்தி (17 வயதின் கீழ்.) ம. சிவகுமார் (15 வயதின் கீழ்,) தெ. வசந்தா தேவி (13 வயதின் கீழ்), ப. இரஞ்சினி (17 வயதின் கீழ்,) (இ)

வியாபாரம் பெருக விளம்பரம்செய்க

## மட்டக்களப்பு---

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

இரு தரப்பினரும் சந்தித்து நிலைமையை மேலும் சுமுகமாக்குவது குறித்து ஆராய்வது என்றும் நேற்று முன்தினம் அறிவிக்கப்பட்டிருந்தது தெரிந்தது.

ஆனால் யுத்த நிறுத்தம் ஏற்படாததால் இந்தச் சந்திப்பு இன்று நடைபெறாது என்று தெரிவிக்கப்பட்டது. (உ)

## யுத்த நிறுத்- - -

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

சாட்டு தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

சிங்கள இராணுவத்தாலும் சிங்கள காவல்துறையினராலும் தமிழீழப் பகுதியில் அமைதி குலையும் என்று பல தடவைகள் நாம் ஸ்ரீலங்கா அரசுக்கு கூறிவந்துள்ளோம்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் சிங்கள காவல்துறையினர், கடந்த இரண்டு மாதங்களுக்குள் பல தடவைகள் பொதுமக்களைத் தாக்கியுள்ளனர்.

கடந்த 10 ஆம் திகதியன்று மட்டக்களப்பிலுள்ள சிங்கள காவல்துறையினர் முஸ்லீம் இளைஞர் ஒருவரைத் தாக்கி விட்டு முகாமுக்குள் ஓடிவிட்டனர்.

அதுபற்றி விசாரிக்கச் சென்ற எமது போராளிகள் மீது துப்பாக்கிப் பிரயோகமும் செய்து விட்டு, தவறுதலாக நடந்துவிட்டது என்றும் கூறியுள்ளனர்.

இதனைத் தொடர்ந்து ஏற்பட்ட பிணக்கை அரசும் நாமும் பேசித்தீர்க்க இணக்கம் கண்டோம்.

ஆனால் மட்டக்களப்பு, அம்பாறை மாவட்டங்களில் முகாம்களிலிருந்த சிங்கள இராணுவம் தான்தோன்றித்தனமாக முகாம்களை விட்டு வெளியேறியபோது எமக்கும் சிங்களப்படைகளுக்கும் இடையில் மோதல் ஏற்பட்டது. -என்று அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருந்தது. [உ]

## மறு அறிவித்---

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

காலையில் இருந்து வடபகுதிக்கான யாழ்தேவி ரயில் சேவையும் ரத்துச் செய்யப்பட்டதாக அறிவிக்கப்பட்டது.

இதனை அடுத்து நேற்றுக் காலை காங்கேசன் துறையில் இருந்து புறப்பட இருந்த யாழ்தேவியும் நேற்று புறப்படவில்லை.

இதேவேளை கொழும்பில் இருந்து அனுராதபுரம் வரை வழமையான ரயில் சேவைகள் நடைபெற்று வருகின்றன. (இ-10)

## இல்ல மெய்வல்லுனர் போட்டி

யாழ்ப்பாணம் ஜூன் 14 வட்டுக்கோட்டை திருநாவுக்கரசு மகா வித்தியாலய வருடாந்த இல்ல மெய்வல்லுநர்போட்டி இன்று வியாழக்கிழமை வட்டுக்கோட்டை விளையாட்டுக்கழக விளையாட்டு மைதானத்தில் வித்தியாலய அதிபர் தலைமையில் நடைபெறும்.

## ஸ்கந்தவரோதய கல்லூரியை முன்னேற்றபாடுபடவேண்டும்

### விளையாட்டுப் போட்டியில் உரை

மயிலணி ஜூன் 12 ''ஸ்கந்தவரோதயக்கல்லூரி இப்பொழுது முன்னேறி வருகிறது. இதற்காக பெற்றோர் பழையமாணவர், நலன்விரும்பிகள் ஆசிரியர்கள் மாணவர்கள் தங்களால்இயன்றபங்கைக் கொடுத்து மேலும் இப்பாடசாலையை பழைய நிலைக்கு முன்னேற்ற முயல வேண்டும்''

ஸ்கந்தவரோதயக் கல்லூரி இல்ல மெய்வல்லுனர் போட்டியில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட மருதனாமடம் உதவிக் கல்விப் பணிப்பாளர் திரு. இ. க. குலசேகரன் தனது உரையில் இவ்வாறு கூறினார்.

மேலும் அவர் பேசுகையில் இப்பாடசாலை திரும்பவும் பழைய நிலைக்கு வரவேண்டும் என பிரார்த்திப்பதாக கூறினார்.

இல்ல மெய்வல்லுனர் போட்டியில் நாகநாதன் இல்லம் முதல் இடம் பெற்றது பல வருடங்களின் பின் இம்முறை இவ் இல்ல மெய்வல்லுனர் போட்டி மிகவும் சிறப்பாக நடைபெற்றது.

கரைச்சி தெற்கு ப. நோ. கூ. சங்கம், கிளிநொச்சி

வெற்றுச் சாக்கு கேள்வி கோரல்

மேற்படி எமது சங்கத்தில் 19000 வெற்றுச் சாக்குகள் கேள்விப் பத்திரம் மூலம் விற்பனைக்கு உண்டு. பெற விரும்புவோர், மீளளிக்கப்படும் பணமாக ரூபா ஐநூறும் (500 00)ம், கேள்விப் பத்திரத்திற்கு ரூபா ஐந்தும் (5.00)ம் சங்கத்தில் செலுத்தி பெற்றுக் கொள்ளவும். சங்கத்தால் வழங்கப்படும் கேள்விப் பத்திர மூலம் 23 – 06 – 90 ஆம் திகதி நண்பகல் 12.00 மணிக்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக ''பொது முகாமையாளர், கரைச்சி தெற்கு பல. நோ. கூ. சங்கம், கிளிநொச்சி'' எனும் விலாசத்திற்கு பதிவுத் தபால் மூலம் அல்லது நேரில் கையளிக்கவும். கடித உறையின் மேல் மூலையில் ''வெற்றுச் சாக்கு கேள்வி கோரல்'' என எழுதப்பட வேண்டும்.

இங்ஙனம்

பொதுமுகாமையாளர்.

கரைச்சி தெ. ப. நோ. கூ. ச., கிளிநொச்சி. (C/4696)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# 2 ஆயிரம் கோடி ரூபா செலவில் விமானந் தாங்கிக் கப்பல்!

## இந்தியா கட்டுகிறது

பம்பாய் ஜூன் 13
இந்திய கப்பல் படையை வலுப்படுத்த தீவிர ஏற்பாடுகள் நடந்து வருகின்றன.

2ஆயிரம்கோடி ரூபாசெலவில் விமானம்தாங்கிக்கப்பல்ஒன்று புதிதாக கட்டப்பட உள்ளது.

இதில் 30 போர் விமானங்கள் ஒரே நேரத்தில் தங்க முடியும். ஏவுகணையும் இதில் பொருத்தப்படும்.

உலகின் கப்பெரிய கப்பல் படைகளில் ஒன்றாக இந்திய கப்பல் படை விளங்குகிறது.

இதில் முதல் தரமான வசதிகளுடன் அதி நவீன முறையில் இயங்கும் கப்பல்களை உருவாக்க இந்தியா மேலும் திட்டமிட்டு வருகிறது.

இதனால் போர் சமயங்களில் இது ஈடுகொடுக்கும் பலம் அதிகரிக்கும்

இந்தியாவிடம் இப்போது உள்ள மிக அதி நவீன போர்க் கப்பல் ''விக்ராந்த்'' ஆகும்

இது தவிர இங்கிலாந்தில் இருந்து வாங்கப்பட்ட ஒரு போர்க்கப்பலையும் இந்தியா புதுப்பித்து நவீனப்படுத்தி தயார் நிலையில் வைத்துள்ளது.

இந்த கப்பல்களில் போர் விமானங்கள் தங்கிச்செல்ல முடியும்.

மேலும் இவற்றின் மூலம் எதிரிகளின் போர் வளையங்களை அறிந்து எதிர்த்தாக்குதல் நடத்தி முறியடிப்பதற்கான பணிகளையும் இந்த கப்பல்களில் இருந்தே நிறைவேற்ற முடியும். (எ)

## சர்வாதிகாரியின் கார்விற்பனை

மாட்ரிட் ஜூன் 13
கொல்லப்பட்ட ருமேனியச் சர்வாதிகாரி நிச்கொலஸ் சீசெஸ்குவின் கடிலக்கார் ஸ்பெயின் நாட்டில் விற்பனைக்கு சென்றுள்ளது.

இந்த 1947 ஆம்ஆண்டு ரக கார் ஒரு லட்சத்து ஐம்பதினாயிரம் டாலருக்கு விற்கப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. சீசெஸ்கு இந்தக் காரை 1975 இல் ஸ்பெயின் சர்வாதிகாரி பிராங்கோ இறந்தபின்னர் பதவிக்கு வந்த கம்யூனிஸ்ட் தலைவர் சந்தியாகோ காரிலோவிடம் கொடுத்திருந்தார். (எ)

★ மொரிஷியஸில்:

# உலக இராமாயண மாநாடு; ஆகஸ்ட் 5 இல் ஆரம்பம்!

புதுடில்லி ஜூன் 13
ஆறாவது உலக இராமாயண மாநாடு மொரிஷியஸ் தலைநகர் போர்ட் லூயிஸில் எதிர்வரும் ஆகஸ்ட் மாதம் 5 ஆம் திகதி ஆரம்பமாகிறது.

நான்கு நாள் மாநாட்டை மொரிஷியஸ் பிரதமர் அனருத் ஜகன்னாத் அங்குரார்ப்பணஞ் செய்வார்.

உலகம் அடங்கிலும் இருந்து 200 க்கு அதிகமான அறிஞர்கள் இம்மாநாட்டில் கலந்து கொளவர். (எ)

★ ஐரோப்பாவில் இருந்து மேலும்

# அணு ஆயுதங்கள் குறைப்புபற்றி ரஷ்யா திடீர் அறிவிப்பு!

ஐரோப்பாவில் இருந்து மேலும் அணு ஆயுதங்களைக் குறைக்கப் போவதாக ரஷ்யா அறிவித்திருக்கிறது.

ஒருதலைப்பட்சமான இந்த அறிவிப்பை சோவியத் வெளியுறவு அமைச்சர் எட்வர்ட் ஷெவாநாட்சே நேற்று கொபன்ஹேகன் மாநாட்டில் வெளியிட்டார்.

பதினாறு அணு ஏவுகணைகள், 250 அணு துப்பாக்கிகள், ஆயிரத்து ஐந்நூறு, அணு ஆயுதங்கள் ஆகியவற்றை குறைக்க உடன் நடவடிக்கை எடுக்கப்படும் என்று திரு. ஷெவாநாட்ஸே சொன்னார்.

சோவியத்தின் இந்த அறிவிப்பு பற்றி மேற்குலக பாதுகாப்பு நிபுணர்கள் பரிசீலனை செய்து வருகின்றனர். (எ)

# பாகிஸ்தானில் இராணுவ அரசாங்கம் மீண்டும் வராது - பெனாஸிர் அறிவிப்பு

இஸ்லாமபாத், ஜூன் 13
பாகிஸ்தானில் மீண்டும் இராணுவச் சட்டம் பிறப்பிக்கப்படமாட்டாது.

பிரதமர் பெனாசிர் பூட்டோ இதனைத் திட்டவட்டமாக அறிவித்தார்.

அவசர செய்தியாளர் மாநாடு ஒன்றில் பேசுகையில், இராணுவச்சட்டம் பிறப்பிக்கவேண்டும்.

என்று வற்புறுத்துபவர்கள் மறைந்த ஜனாதிபதி ஸியா-உல்-ஹக்கின் இராணுவ ஆட்சியின் கீழ் நன்மை பெற்றவர்களே ஆவர் — என்று பெனாசிர் சொன்னார்.

இதனிடையில் பெனாஸிர் சொன்னார்.

இதனிடையில் பெனாஸிர் அமைச்சரவை உறுப்பினர் ஒருவர் பதவி விலகி விட்டார் என்று அறிவிக்கப்பட்டது.

அதேவேளை, சிந்து மாகாணத்தில் செல்வாக்குப் பெற்று விளங்கும் அபிராமி



பெனாஸிர்

லீக் தலைவர் வலிகான், இந்தியாவுடன் சிம்லா உடன்பாட்டின் அடிப்படையில் பேச்சு நடத்தி காஷ்மீர் பிரச்சினைக்குத் தீர்வுகாணும் படி பாகிஸ்தான் பிரதமரைக் கேட்டுக்கொண்டார்.

போரில் இறங்கினால் அதனால் பாகிஸ்தானுக்கே பேரழிவு ஏற்படும் என்று எல்லைக் காந்தி அப்துல் கபார் கானின் புதல்வரான வலிகான் சொன்னார்.

பாகிஸ்தானில் உள்நாட்டுக் கலவரம் அதிகரித்து வருகிறது, இந்தியாவுடன் போர் தொடுக்கும் அபாயமும் ஏற்பட்டுள்ளது. இந்த நிலையில் இராணுவச் சட்டத்தை மீண்டும் கொண்டு வரும்படி பாகிஸ்தான் ஜனாதிபதியை எதிர்க்கட்சிகள் கேட்டுள்ளன என்பது தெரிந்ததே! (எ)

## பாகிஸ்தான் எதிர்காலம் பற்றி தளபதி கருத்து

இஸ்லாமாபாத், ஜூன் 13
பாகிஸ்தானின் எதிர்காலம் கவலை தருவதாக இருக்கிறது.

இதற்குக் காரணம் நாட்டின் உள்நாட்டு நிலைவரம் மோசமடைந்து வருவதே என்று பாகிஸ்தானின் இராணுவத் தளபதி ஜெனரல் அஸ்லம்பெக் தெரிவித்தார். (ஒ-எ)

## சோவியத் நிலவரம்

மாஸ்கோ, ஜூன் 13
சோவியத் யூனியனில் உள்ள மாநிலங்களில் ஒன்றான ரஷ்ய சம்மேளனம் இறைமையுள்ள நாடாகத் தன்னை நேற்று பிரகடனப் படுத்திக் கொண்டது.

ரஷ்ய சம்மேளன நாடாளுமன்றத்தில் இது சம்பந்தமான பிரேரணை 907 வாக்குகளால் நிறைவேற்றப்பட்டது. 13 பேர் எதிர்த்து வாக்களித்தனர். 9 பேர் நடுநிலை வகித்தனர்.

இதனிடையில் சோவியத்தில் உள்ள ஒவ்வொரு மாநிலமும் இறைமையுள்ள மாநிலம் தான் என்று சோவியத் ஜனாதிபதி கோர்பச்சேவ் தெரிவித்தார். [எ]

## பின்லாந்தின் பெண் அமைச்சர்

ஹெல்சிங்கி ஜூன் 13
பின்லாந்தின் புதிய பாதுகாப்பு அமைச்சராக ஒரு பெண் நியமிக்கப்பட்டார்.

சிறிய சுவிடிஸ் அரசியல் கட்சியின் நாடாளுமன்றக் குழுத் தலைவியான எலிசபெத் ரெஹ்ன் என்பவரே இப் பதவிக்கு நியமிக்கப்பட்டார். (எ)

★ லைபீரியா நெருக்கடி

# சமரசப் பேச்சுக்கள் ஆரம்பம்; மொன்றோவியாவில் பதற்றம்!

மொன்றோவியா ஜூன் 13
லைபீரியாவில் சடந்த ஆறு மாத காலமாக நடந்து வரும் கிளர்ச்சிக்கு முடிவு கட்டும்பேச்சுக்கள்ஸியாராலியோ வின் தலைநகரில் ஆரம்பமாகின.

அமெரிக்கத் தூதரகத்தில் முதற்கட்டப் பேச்சுக்கள் நடந்தன.

கிளர்ச்சியாளர்களின் முதல் நிபந்தனையை லைபீரிய அரசுத் தூதுக்குழு நிராகரித்து விட்டது.

லைபீரிய ஜனாதிபதி சாமுவல்டோ ராஜினாமாச் செய்ய வேண்டும் என்பதே அந்த நிபந்தனை ஆகும்.

இதனிடையில் — தலைநகர் மொன்றோவியாவில் இருந்து 35 மைல் தொலைவில உள்ள சர்வதேச விமான நிலையத்தைக் கைப்பற்ற கிளர்ச்சிக்காரர்கள் எடுத்த முயற்சியை அரசுப்படைகள் முறியடித்து விட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

அதேவேளை— மொன்றோவியாவில் பதற்றம் நிலவுவதால் அங்கு இருந்து அமெரிக்க பிரிட்டிஷ் மற்றும் பிரான்ஸ் நாட்டுப் பிரசைகளை வெளியேற்றும் முயற்சியில் அந்தந்த நாட்டுத் தூதரகங்கள் ஈடுபட்டுள்ளன. (எ)

# யார் இந்தபுரட்சிச் செல்வி? அரங்கநாயகம் கேட்கிறார்!

கோவை ஜூன் 13
ஜெயலலிதாவை ஆட்சியில் அமர்த்துவேன் என கூறும் வீரப்பன் உடலில் என்ன ரத்தம் ஓடுகிறது? என்று ராகவானந்தம் கேள்வி விடுத்தார்.

கோவை: மேல் நிலைப்பள்ளி அருகே தி மு க. பொதுக் கூட்டம் நடத்தது

இதில் கலந்துகொண்டு முன்னாள் அமைச்சர் எஸ். ராகவானந்தம் பேசினார்.

அவர் கூறியதாவது;-

எனக்கு 74 வயது ஆகிறது என்றாலும் எனக்கு எதிலும் தளர்ச்சி ஏற்படவில்லை.

ஜெயலலிதா என்னை கொலை செய்யமுயற்சி நடக்கிறது என்று சொல்வதை தொழிலாக கொண்டுள்ளார்.

ஜெயலலிதாவை கீழ்த்தரமாக வர்ணித்த ஆர். எம். வீரப்பனும் காளிமுத்துவும் இன்று கலைஞரை ஆட்சியில் இருந்து இறக்கிவிட்டு ஜெயலலிதாவை பதவியில் அமர்த்துவோம் என்கிறார்கள்.

இவர்களது உடம்பில்என்ன ரத்தம் ஓடுகிறது.

கலைஞர் போஸ்டர் ஒட்டி தொண்டனாகி கையெழுத்து பிரதி வெளியிட்டு முதல்வராகி வந்திருக்கிறார்.

ஆனால் நீங்கள் புரட்சிச் செல்வி என்றும் கூறும் ஜெயலலிதா யார்? (எ)

# சிங் அரசைக் கவிழ்க்கும் முயற்சியில் ஈடுபடவில்லை!

## சந்திரசேகர் அறிவிப்பு

திருவனந்தபுரம் ஜூன் 13
பிரதமர் வி.பி.சிங் அரசை கவிழ்ப்பதற்கு மார்க்சிச கம்யூனிஸ்டு கட்சி உதவியை நாடியதாக வெளியான செய்தி சுத்தப்பொய் என்று ஜனதா தலைவர் சந்திரசேகர் கூறினார்.

குமரி மாவட்டம் நாகர் கோவிலில் ஜனதா தளம் ஊழியர்கள் கூட்டத்தில் பேசிய ஜனதா தளம் தலைவர் சந்திரசேகர் பின்னர் திருவனந்தபுரம் (கேரளா) சென்றார்.

அங்கு அவர் செய்தியாளர்களிடம் கூறியதாவது:-

### கற்பனை கதை

மத்தியில் உள்ள பிரதமர் வி.பி.சிங் ஆட்சியை கவிழ்த்து விட்டு தேசிய அரசு அமைக்க நானும் மதுலிமாயியும் மார்க்சிய கம்யூனிஸ்ட் கட்சி உதவியைநாடியதாகவந்த செய்தி ஆதாரம் இல்லாதது. கற்பனைக் கதை.

சிலருக்கு மனோதத்துவ பிரச்சினை உள்ளது. என்னை சம்பந்தப்படுத்தி எழுதாவிட்டால் திருப்தியாகஇருக்காது.

### உருப்படாது

''தேசிய அரசு'' என்ற திட்டம் சில அறிஞர்கள் மூளையில் உதயமானது. அது உருப்படாத திட்டம். என்றாலும் அரசியலில் நடக்காதது ஒன்றும் இல்லை.

# சீனாவின் அதிசய இன நெல்லை விற்கும் உரிமை அமெரிக்காவிடம்!

மற்ற நெல் இனங்களிலும் பார்க்க 25 சதவீதம் அதிக விளைச்சலைக் கொடுக்கவல்ல நெல்லினம் ஒன்றை சில ஆண்டுகளுக்கு முன்பு சீனா உருவாக்கியது.

சீனாவின் மூன்று கோடி முப்பது லட்சம் ஹெக்டேர் நெல் வயல்களில் மூன்றில் ஒரு பங்கில் அந்த அதிசய நெல் இனம்தான் பயிரிடப்படுகின்றது. ஆனால், அது மற்ற நாடுகளுக்கு மறுக்கப்பட்டுள்ளது.

இந்தத் தகவலை ஐக்கிய நாடுகளின் உணவு விவசாய நிறுவனத்தின் ஆசியப் பிரதிநிதியான பி. டி. ஷிங் சென்பு லக்சம்பேர்க்கில் நடைபெற்ற 'மூன்றாம் உலக விவசாயத்தில' உயிரியல் தொழில்நுட்பம் என்ற தலைப்பில் உரையாற்றும்போது கூறினார்.

ஷிங் எந்த விவரங்களையும் வெளியிடவில்லை.

அந்த மகாநாட்டில் பங்குபற்றிய சீன விஞ்ஞானிகளும் எந்தத் தகவலையும் கூறத் தயங்கினார்கள் வற்புறுத்திக் கேட்டபோது 'அது மிகவும் சிக்கலான விடயம்' என்று மட்டுமே பதிலளித்தனர்.

எனவே இந்த இரகசியத்தை அம்பலப்படுத்த 'பானோஸ்' முடிவுசெய்தது 'பானோஸ்' எழுத்தாளர் குழு நடத்திய ஆய்வின்போது பல சுவாரசியமான தகவல்கள் கிடைத்தன.

அந்த அதிசய நெல்லை அபிவிருத்தி செய்து அதன் விதைகளை மற்றநாடுகளுக்கு விற்பனை செய்யும் உரிமையைச் சீனா இரண்டு அமெரிக்க கம்பனிகளுக்கு வழங்கியுள்ளது.

இரண்டுமே பல்நாட்டுக் கம்பனிகள். அவற்றில் ஒன்று கார்கில் சீட்ஸ். மற்றயது ரிங் எறவுண்ட் புரடக்ட்ஸ். இது ஒக்சிடென்டல் பெற்றோலியத்தின் உபகம்பனி.

சீனாவுடன் இந்தக் கம்பனிகள் செய்து கொண்ட ஒப்பந்தம் இன்னும் இரகசியமாகவே வைக்கப்பட்டுள்ளது.

ஆனால் பிலிப்பைன்ஸ் நாட்டிலுள்ள சர்வதேச நெல் ஆராய்ச்சி நிலைய அதிகாரிகள் இந்த ஒப்பந்தங்கள் பற்றி ஓரளவு அறிந்து வைத்திருக்கின்றார்.

எந்த நாடுகளுக்கு அதிசய நெல் விதைகளை விற்கும் உரிமையை கார்கில் சீட்ஸ் பெற்றிருப்பதாக அவர்கள் கூறுகிறார்கள். அவுஸ்திரேலியா, ஆர்ஜன்ரீனா, தாய்லாந்து, தைவான், பிலிப்பைன்ஸ், ஆகியவையே அந்த நாடுகள்.

வேறு ஒன்பது நாடுகளுக்கு விற்பனைசெய்யும் உரிமையை ரிங் எறவுண்ட் பெற்றிருக்கிறது. ஐப்பான், இத்தாலி, எகிப்து, ஸ்பெயின், மெச்சிக்கோ, போத்துக்கல், வடகொரியா, இந்தோனிஷியா, பிரேசில் ஆகியனவே அந்த நாடுகள்.

இந்த ஒப்பந்தங்கள் 1987 ஆம் ஆண்டின் பிற்பகுதியில் செய்யப்பட்டதாகத்தெரிகின்றது. அந்த ஆண்டில்தான் சர்வதேச நெல் ஆராய்ச்சி நிலையம் நடத்திய கலப்பின நெல் பயிற்சிநெறிக்கு அளிக்கும் பொருளுதவியை சீனா நிறுத்திக் கொண்டது.

அமெரிக்கக் கம்பெனிகளுடன் செய்து கொண்ட ஒப்பந்தங்கள் கலப்பின நெல் ஆராய்ச்சியில் மற்ற நாடுகளுடன் கூட்டுச் சேருவதைத் தடை செய்கிறதாம். இதனால் சர்வதேச நெல் ஆராய்ச்சி நிலையம் புதிய வகை நெல்லினங்களை உருவாக்க நேரிட்டது.

''சீனர் உருவாக்கிய தொழில் நுட்பம் எமக்குக் கிடைக்காது போனது பெரிய துர் அதிர்ஷ்டம்'' என்கிறார்கள் கலப்பின நெல் ஆராய்ச்சியாளர்கள். (நன்றி:பனோஸ்) (எ)




# 5 ஆம் ஆண்டு நினைவு தினம்



அமரர் உயர்திரு
**வே. சி. நடராசா**
(மிக் இன்டஸ்றீஸ் ஸ்தாபகர்)

தோற்றம்: 1921 - 03 - 10
மறைவு 1985 - 06 - 08

திதி: 1990 — 06 — 14

ஐயா
நீங்கள் எங்களை பிரிந்து ஆண்டுகள் ஐந்தான போதிலும் என்றும் உங்கள் நினைவுகள் எங்களை விட்டு அகன்றதில்லை

இன்றைய உங்கள் நினைவு தினத்தில் (திதி) உற்றமும், சுற்றமும் சூழ நினைவு தின பூசையும் மகேஸ்வர பூசையும் செய்து உங்கள் ஆத்மா சாந்தி பெற பிரார்த்திக்கின்றோம்.

சாந்தி! சாந்தி! சாந்தி!

அன்பு மனைவி,
மகன், மகள்மார், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

28, திருநெல்வேலி,
சிவன் புது வீதி, யாழ்ப்பாணம். [13374]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Method of Book-keeping
கடை கணக்கு முதல் கம்பனி கணக்கு வரை எவ்வாறு எழுதப்பட வேண்டும் என்பதை ஆரம்பத்திலிருந்து தபால் மூலம் கற்றுத்தரப்படும் ஆறு மாத கால Diploma பயிற்சியாகும்.
விபரங்கட்கு:-
BRIGHT TRAINING CENTRE
P. O. BOX, 162. COLOMBO, SRI LANKA.

# உதயன்

14 - 06 - 1990 வியாழக்கிழமை

Spoken English
ஆங்கிலம் பேச வேண்டும் என்ற விருப்பம், ஆனால் தவறாகப் பேசிவிடுவோம் என்ற தயக்கம், இதுதானே உங்கள் பிரச்சினை: உளவியல் ரீதியில் 90 நாட்களில் ஆங்கிலம் பேசும் பயிற்சி.
விபரங்கட்கு:
BRIGHT TRAINING CENTRE
P. O. BOX. 162. COLOMBO, SRI LANKA.

## நேற்றும் மட்டுப்படுத்தப்பட்ட பணக் கொடுக்கல் வாங்கல்

யாழ்ப்பாணம், ஜூன் 14
யாழ். நகர வங்கிக் கிளைகளில் நேற்று மட்டுப்படுத்தப்பட்ட பணக் கொடுக்கல் வாங்கல்கள் நடைபெற்றன.

வங்கிகளுக்கு நேற்றும் பொலிஸ் பாதுகாப்பு இல்லாத காரணத்தால் வங்கிகள் மக்கள் நலன் கருதி இந்த மாற்று நடவடிக்கையைமேற்கொண்டன.

பொதுமக்கள் வங்கிகளில் இட்ட பணத்தில் இருந்தே இந்தப் பணக் கொடுக்கல் வாங்கல்கள் நடைபெற்றன.

கோட்டைக்குள் இருக்கும் பணப் பெட்டகத்தில் இருந்து வங்கிகளுக்குப் பணம் கொண்டுவரப்படவில்லை. (இ-10)

## வவுனியா சிங்களவர்கள் இடம் பெயர்கின்றனர்

வவுனியா, ஜூன் 14
வவுனியா எல்லைக் கிராமங்களில் வசித்து வந்த சிங்களக் குடும்பங்கள் இருப்பிடங்களை விட்டு வெளியேறி வருவதாக வவுனியாவில் இருந்து கிடைத்த தகவல்கள் தெரிவித்தன.

அங்கு நிலவும் அசாதாரண நிலை காரணமாகவே அவர்கள் வெளியேறி வருவதாகத் தெரிவிக்கப்பட்டது. [ஒ-3)

## பொது மக்களை விழிப்புடன் செயற்பட வேண்டுகோள்

கொழும்பு, ஜூன்14
பொதுமக்களை மிகுந்த விழிப்புடன் செயல்படும்படி பொலிஸ் வேண்டுகோள்விடுத்துள்ளது.

ஏதாவது பொருள்கள் அனாதரவாகக் கிடப்பது காணப்பட்டால் உடனடியாக அருகில் உள்ள பாதுகாப்பு முகாம்களுக்கு தகவல் கொடுக்கும்படி பொதுமக்களைப் பொலீஸார் கேட்டுள்ளனர்.

சட்டத்தை மதித்து நடக்கும்படியும் மக்களைப் பொலீஸார் கேட்டுள்ளனர். (இ-எ)

### நாளையும், மறுதினமும்

## கொழும்பில் நடக்கவிருந்த தமிழ்த் தினவிழா ஒத்திவைப்பு

நாளையும் நாளை மறுதினமும் கொழும்பில் நடைபெற இருந்த அகில இலங்கை தமிழ்த் தினவிழா ஒத்திப் போடப்பட்டுள்ளது.

வடக்கு-கிழக்கு மாகாணத்தில் ஏற்பட்டுள்ள போக்குவரத்து நெருக்கடி காரணமாக நிகழ்ச்சிகள் ஒத்திப் போடப்பட்டுள்ளன என அறிவிக்கப்பட்டது.

புதிய திகதிகள் பின்னர் அறிவிக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டது. (ஒ-எ)

## கன்யாகுமரியில் மிகப்பெரிய ஹெரோயின் வேட்டை

சென்னை, ஜூன் 14
இந்தியப் பணத்தில் பத்து கோடி ரூபா பெறுமதியான ஹெரோயின் போதை வஸ்தை தமிழ்நாடு அதிகாரிகள் கோஷ்டி, கன்யாகுமரியில் உள்ள விடுதியின் அறை ஒன்றில் இருந்து கைப்பற்றியது.

போதைவஸ்துவின் எடை 9.85 கிலோ கிறாம்கள் ஆகும் சூட்கேஸ் ஒன்றினுள் போதை வஸ்து வைக்கப்பட்டிருந்தது.

விடுதி அறையில் தங்கி இருந்தவர்கள் தலைமறைவாகி விட்டனர் என்று தெரிவிக்கப்பட்டது. (ஒ-எ)

## பல்கலை: அனுமதி விண்ணப்பம் முடிவுத் திகதி ஜூலை 7இல்

கொழும்பு ஜூன் 14
பல்கலைக்கழகத்தில் 1990-91ஆம் கல்வியாண்டில் சேர்ந்து படிக்க1989 டிசெம்பர் ஜீ.சி.ஈ. உயர்தரப் பரீட்சை எடுத்துத் தகுதி பெற்ற மாணவர்களிடம் இருந்து பல்கலைக்கழக மானிய ஆணைக்குழு விண்ணப்பம் கோரியுள்ளது.

விண்ணப்ப முடிவு திகதி எதிர்வரும் ஜூலை மாதம் 7ஆம் திகதி ஆகும்.

விண்ணப்ப படிவங்கள் இம்மாதம் 14 ஆம் திகதி முதல் அடுத்த மாதம் 13 ஆம் திகதி வரை விநியோகிக்கப்படும் என்று அறிவிக்கப்படுகிறது. (இ-எ)

## மரண அறிவித்தல்

### திருமதி ஸ்ரீ ஞானரஞ்சிதம் (ஸ்ரீ)பத்மநாதன்

கொக்குவில் மேற்கைச் சேர்ந்த திருமதி ஸ்ரீ ஞானரஞ்சிதம் (ஸ்ரீ) பத்மநாதன் 12 - 6 - 90 அன்று காலமாகிவிட்டார்.

இவர் பத்மநாதன் (தேசிய கடதாசிக் கூட்டுத்தாபனம், வாழைச்சேனை) அவர்களின் அன்பு மனைவியும், கஜன், சோபிகா ஆகியோரின் அன்புத் தாயாரும், காலஞ்சென்ற டாக்டர் கந்தசாமி, திருமதி விசாலாட்சி (அம்பிகை) ஆகியோரின் சிரேஷ்ட புதல்வியும், காலம் சென்ற நடராசா, திருமதி அல்லியம்மா ஆகியோரின் மருமகளும், திருமதி மனோரஞ்சிதம் பாலிதராஜா (சுவிஸ்) சிவரஞ்சினி ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.

இவ்வறிவித்தலை உற்றாரும், உறவினரும் நண்பர்களும் ஏற்றுக்கொள்ளவும்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் பற்றிய அறிவித்தல் பின்னர் அறிவிக்கப்படும்.

தகவல்:
ந. கணநாதன் [சபா]

கொக்குவில் மேற்கு,
கொக்குவில்.

(13434)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்பிளிக்கேஷன்(பிறைவேட்) லிமிட்டெட்டினால் யாழ்ப்பாணம், நாவலர் வீதி, 292/2 இலக்கத்தில் உள்ள அச்சகத்தில் 14-06-1990 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

## ஒரு தலைப்பட்ச யுத்த நிறுத்த மீறல் என்கிறது இலங்கை அரசு

கொழும்பு, ஜூன் 14
பாதுகாப்பு அமைச்சு நேற்று வெளியிட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது;

ஒருதலைப்பட்ச யுத்த நிறுத்த மீறலால் வடக்கு-கிழக்கு நிலைமை மேலும் மோசமாகி வருகிறது.

யாழ்ப்பாணம் சென்று வடக்கு - கிழக்கு சமாதான கமிட்டித் தலைவர் சாகுல் ஹமீது விடுதலைப் புலிகள் தலைவர்களுடன் பேச்சுக்கள் நடத்திவிட்டு கொழும்பு திரும்பிய பின்னர் முருங்கன் பொலிஸ் நிலையத்தை விடுதலைப் புலிகள் கைப்பற்றினர்.

புலிகள் இயக்கம் நடத்திய தாக்குதலில் 5 சிப்பாய்கள் மரணமடைந்தனர். 10 பேர் காயமடைந்தனர். திருப்பி நடத்தப்பட்ட தாக்குதலில் விடுதலைப் புலிகளுக்குபலத்த சேதம் ஏற்பட்டது.

பிந்திய அறிக்கைகளின் படி பருத்தித்துறை, காங்கேசன்துறை, மன்னார், வவுனியா பொலிஸ் நிலையங்கள் தாக்கப்பட்டுள்ளன.

விடுதலைப் புலிகள் கைப்பற்றிய பொலீஸ் நிலையங்களை மீண்டும்பொறுப்பேற்க இலங்கைப் படைகளுக்குப் போதிய ஆட்பலமும் ஆயுத பலமும் வழங்கப்பட்டுள்ளன.

படைகளின் உயிர்களுக்கும் உடைமைகளுக்கும் பாதுகாப்பு அளிக்கவும் அத்தியாவசிய சேவைகளை நடத்தவும் சகல முயற்சிகளும் எடுக்கப்பட்டு வருகின்றன.

இப்படி பாதுகாப்பு அமைச்சு அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-எ)

## புலிகளின் பயிற்சி முகாம் ஏதும் தமிழகத்தில் இல்லை

### கலைஞர் மீண்டும் வலியுறுத்து

சென்னை, ஜூன் 14
தமிழ்நாட்டில் விடுதலைப் புலிகளின் பயிற்சி முகாம் எதுவும் இல்லை. போராளிகள் பயிற்சி முகாம்கள் தமிழ்நாட்டில் இருப்பதை அரசு விரும்பவில்லை.

அத்தகையமுகாம்கள் இருப்பதாகச் சிலர்கூறுவது வதந்தி பரப்பும் செயலாகவே கருதப்படும்.

தமிழகமுதலமைச்சர் கலைஞர் கருணாநிதி நேற்று சென்னையில் செய்தியாளர்களிடம் இத்தகவலை மீண்டும் வலியுறுத்திக் கூறினார்.

முதலமைச்சர் மேலும் கூறியதாவது:-

பயிற்சி முகாம்கள் இருப்பதை அறிந்தவர்கள் அது பற்றிய தகவலைத் தொலைபேசிமூலம் அறிவித்தால், அத்தகைய பயிற்சி முகாமை அகற்ற உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படும்.

விடுதலைப் புலிகள்மீது தி. மு. க. அனுதாபம் வைத்திருப்பது இந்திய அரசுக்கு விரோதமானநிலையில் உள்ள அனுதாபம் அல்ல - என்றார் அவர். (ஒ-எ)

## ஜீப்புடன் காணவில்லை

கொழும்பு, ஜூன் 14
அம்பாறையில் உள்ள உதவிப் பொலீஸ் அதிபர் ஒருவரை ஜீப்புடன் காணவில்லை என்று பொலீஸ், தலைமை அலுவலகம் அறிவித்துள்ளது.

கம்முனையில் கடந்த திங்கள் கொல்லப்பட்ட பத்து இலங்கைச் சிப்பாய்களின் உடல்களையும் விடுதலைப் புலிகள் எரித்து விட்டனர் என பொலிஸ் வட்டாரங்கள் தெரிவித்தன. (இ-எ)

## ரயில் ஆசன பதிவு நிறுத்தம்

யாழ்ப்பாணம், ஜூன் 14
யாழ். ரயில் நிலையத்தில் மறு அறிவித்தல் வரை முன்கூட்டிய ஆசனப் பதிவுகள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது என யாழ். ரயில் நிலைய பிரதம அதிபர் அறிவித்துள்ளார்.

யாழ்ப்பாணத்துக்கான பயணிகள் ரயில் சேவைகள் அனைத்தும் நிறுத்தப்பட்டதன் காரணமாகவே ஆசனப் பதிவுகளும் நிறுத்தப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை முன்கூட்டிய ஆசனங்களைப் பதிவு செய்து கொண்டவர்கள் ரயில் சேவை மீண்டும் ஆரம்பமாவதற்கு முன் வந்து தமது ஆசனப் பதிவுக்கான கட்டணங்களை மீளப்பெற்றுக் கொள்ளலாம் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (இ-10)

## உள்ளூர் தபால் மட்டுமே

யாழ்ப்பாணம், ஜூன் 14
யாழ்ப்பாணத்தில் நேற்று உள்ளூர்த் தபால்கள்மட்டுமே பட்டுவாடா செய்யப்பட்டன.

நேற்று கொழும்பில் இருந்து மெயில்ரயில் வராததே இதற்குக்காரணம்.

இதேவேளை வெளியூர்களுக்கான தபால் கட்டும் வேலைகள் தொடர்ந்து நடைபெறும் என்றும் ரயில்சேவை வழமைக்குத் திரும்பியதும் தபால்பொதிகள் மெயில் ரயிலில் அனுப்பப்படும் என்றும் யாழ். தபால் திணைக்கள உயரதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

உள்ளூர் தபால் பட்டுவாடா வழமைபோல் தினமும் நடைபெறும் என்றும் அந்த அதிகாரி தெரிவித்தார்.

## சாவகச்சேரியில் தராசுகளுக்கு சீல் வைப்பு

பச்சிலைப்பள்ளி, ஜூன் 14
அரசாங்க அளவைத் திணைக்களத்தினால் தராசுகளுக்கு முத்திரையிடும் பணிகள் சாவகச்சேரி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தில் நடைபெறுகின்றன.

இம்முத்திரையிடும் பணிகள் நாளை 15 ஆம் திகதியுடன் முடிவடைகின்றன.

## ஆஸ்பத்திரி பொலீஸ் பிரிவில் பொலீஸாரின் வரவு பதிவு

யாழ்ப்பாணம், ஜூன் 14
பொலீஸ் அத்தியட்சகர் அலுவலகத்தில் கடமையாற்றும் பொலீஸார், இலிகிதர்கள் உட்பட பல ஊழியர்கள் தமது தினவரவுகளை யாழ்-ஆஸ்பத்திரி பொலீஸ் பிரிவில் வரவு வைத்து வருகின்றனர்.

பொலீஸ் நிலையத்துக்கு பொலீஸார் செல்வதற்கு விடுதலைப் புலிகள் அனுமதிவழங்கியுள்ளபோதிலும் அங்கிருந்து திரும்பி வர அனுமதி மறுத்து வருகின்றனர்.

இதன் காரணமாக ஊழியர்கள் நேற்றும் கடமைக்கு செல்லவில்லை. யாழ். ஆஸ்பத்திரி பொலீஸ் பிரிவில் வரவைப் பதிந்து வருகின்றனர். (இ-10)

### ஊனமுற்றோர்

## சுய தொழில் வேலை வாய்ப்புக்கு யாழ். செயலகம் கடன் வழங்கும்

யாழ். மாவட்டத்தில் வன்செயல்களினால் ஊனமுற்றோருக்கு சுயதொழில்வேலை வாய்ப்புக்காக யாழ்-செயலகம் கடன் வழங்கவிருக்கிறது.

யாழ்-மாவட்ட சனத்தொகையில் 12 சதவீதமானவர்கள் ஊனமடைந்தவர்கள்என மதிப்பிடப்பட்டுள்ளது.

அவர்களுக்கு உதவும் வகையில் உருவாக்கப்பட்டுள்ள ஊனமுற்றோர் புனர்வாழ்வுச் சங்கம்மூலமாக செயலகம்கூட்டுறவு முறையில் சுயதொழில் ஆரம்பிக்க கடன் வழங்க விருப்பதாகத் தெரிவிக்கப்பட்டது.

இந்த வேலைத்திட்டத்தில் சேர விரும்புபவர்களை மேற்படி சங்கத்துடன் தொடர்பு கொள்ளுமாறு கோரப்படுகிறது. (இ 3

## இந்திய செஞ்சிலுவைச் சங்கம் ஆயுள் வேத மருந்து உதவி

கைதடி ஆயுள்வேத வைத்தியசாலைக்கு இந்திய செஞ்சிலுவைச் சங்கம் ஆயுள்வேத மருந்து வகைகளை வழங்கியுள்ளது.

இந்த வைத்தியசாலையில் ஆயுள்வேத மருந்து, மூலிகை வகைகளுக்கு தட்டுப்பாடு நிலவி வந்தது.

இதைத் தொடர்ந்து யாழ் செஞ்சிலுவைச்சங்கம் விடுத்த கோரிக்கையையடுத்து இந்திய செஞ்சிலுவைச் சங்கம் அன்பளிப்பாக பெறுமதிவாய்ந்த ஆயுள்வேத மருந்துகளை வழங்கியுள்ளது. [இ-3]

## தேவையானநிதியுண்டு; ஆனால் தொண்டர் வைத்தியர் இல்லை

யாழ்ப்பாணம் ஜூன் 14
தொண்டர் வைத்தியர்களை வைத்தியசாலைகளுக்கு நியமிக்க நிதியுதவி உண்டு. ஆனால் நியமிக்க வைத்தியர்கள் இல்லை.

யாழ்-செஞ்சிலுவைச் சங்க வட்டாரங்கள் மேற்கண்டவாறு கவலை தெரிவித்தன.

வடக்கு கிழக்கு மாகாணங்களில் நிலவும் வைத்தியர் பற்றாக்குறையை நீக்க சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் 20 தொண்டர் வைத்தியர்களை நியமிக்க யாழ் செஞ்சிலுவைச்சங்கத்துக்குநிதி வழங்கியுள்ளது.

இந்த நிதியில் இருந்து ஒன்பது ஆங்கிலவைத்தியர்களும், நான்கு ஆயுள்வேத வைத்தியர்களும் நியமிக்கப்பட்டுள்ளார்கள்.

மேலும் ஏழு ஆங்கில வைத்தியர்களை நியமிக்க நிதி உண்டு. ஆனால் வைத்தியர்கள் தான் இல்லை என்று கவலை தெரிவிக்கப்பட்டது.

யாழ் - வைத்திய பீடத்தில் இருந்து கடந்த வருடம் வெளியேறிய வைத்தியர்களுக்கு அரச நியமனம் வழங்கப்படாத போதும் அவர்கள் தனியார் வைத்தியசாலைகளிலேயே கடமையாற்றுவதாகவும் தெரிவிக்கப்பட்டது. (இ 3)

## டெங்குவுக்கு எதிரான போராட்டம்

கொழும்பு, ஜூன் 14
டெங்கு காய்ச்சலுக்கு எதிரான போராட்டத்தில் யானைக்கால் நோய் தடுப்புப் பிரிவு ஊழியர்களையும் ஈடுபடுத்தும்படி சுகாதார அமைச்சர் ரேணுகா ஹெரத் பணித்திருக்கிறார்.

கொழும்பில் கடந்த 2 ஆம் திகதி வரை டெங்கு காய்ச்சலால் 34 பேர் உயிரிழந்தனர். [இ-எ]

## போக்குவரத்து இடைநிறுத்தம்

யாழ்ப்பாணம், ஜூன் 14
யாழ்ப்பாணத்திலிருந்து மட்டக்களப்புக்கான போக்குவரத்துச்சேவைகள் வடபிராந்திய போக்குவரத்துச் சபையினால் இடைநிறுத்தப்பட்டுள்ளன. (ஒ-10)

## மூப்பனாரின் குற்றச்சாட்டு

திருச்சி, ஜூன் 14
தமிழ் நாட்டில் விடுதலைப் புலிகளின் நடவடிக்கை அதிகரித்து வருவதாக தமிழ் நாடு காங்கிரஸ் தலைவர் கருப்பையா மூப்பனார் தெரிவித்தார்.

இதனால் தமிழக கடலோரப் பகுதிகளில் கள்ளக் கடத்தல் அதிகரித்து இருப்பதாகவும் அவர் கூறினார். (ஒ-எ)

## கடையிற்சுவாமி சிறப்பு நிகழ்ச்சி

யாழ்ப்பாணம், ஜூன் 14
ஈழநாட்டின் முதன்மைச் சித்தரும் செல்லப்பா சுவாமிகள், யோகர் சுவாமிகளின் ஆன்மீக வழிகாட்டியுமான கடையிற் சுவாமிகள் சமாதியடைந்த நூற்றாண்டைமுன்னிட்டு இவ்வாண்டு முழுவதும் ஒவ்வொரு மாதத்திலும் வரும் சதய நட்சத்திரத்தில் கடையிற்சுவாமி தேவஸ்தானத்தில் சிறப்பு நிகழ்ச்சிகள் நடைபெறவுள்ளன.

அந்தவகையில் இன்று வியாழக்கிழமை பிற்பகல் 5 மணிக்கு யாழ். நீராவியடியிலுள்ள தேவஸ்தானத்தில் 'அனுபூதிமான்களது அருள் நிலையங்கள்' என்னும்பொருளில் திரு. க. சிவராமலிங்கம் சொற்பொழிவாற்றுவார். [ஒ-7]

செய்திச் சாரம்

## மாணவன் தப்பினான்

கொழும்பு, ஜூன் 14
சிறைப்பாதுகாவலரின் பாதுகாப்பில் கொழும்பு ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டிருந்த கொழும்பு பல்கலைக்கழக பட்டதாரி மாணவன் ஒருவன், தப்பி ஓடிவிட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

ஜேவிபியின் இராணுவப் பிரிவின் முக்கிய உறுப்பினரான இவரின் பெயர் டொன் மரீதிசிறி. (இ-எ)

## தேசிய சேமிப்பு வங்கி கிளைகள்

யாழ்ப்பாணம், ஜூன் 14
ஊர்காவற்துறை,சங்கானை பகுதிகளில் தேசிய சேமிப்பு வங்கிக் கிளைகள் திறக்கப்படஉள்ளன.

இதற்கானநடவடிக்கைகளை தேசிய சேமிப்பு வங்கியின் தலைமைப் பீடம் மேற்கொண்டு வருகிறது. (இ-10)

## சராசரி 29 விபத்துக்கள்

கொழும்பு ஜூன் 14
கொழும்பு நகரில் சடந்த மே மாதத்தில் சராசரியாகத் தினமும் 29 வீதி விபத்துக்கள் இடம்பெற்றன என்று போக்குவரத்துப் பொலீஸ் திணைக்களம் அறிவித்திருக்கிறது. (இ-எ)

## இன்றைய போட்டிகள்

மிலான், ஜூன் 14
இன்று நடைபெற உள்ள உலக கிண்ண உதைபந்தாட்ட போட்டிகள் வருமாறு;

'ஏ, பிரிவு:
இத்தாலி எதிர் அமெரிக்கா
(இடம்: ரோம்)

'பி' பிரிவு:
கமரூன் எதிர் ருமேனியா
(இடம்: பாரி)

'டி' பிரிவு:
யூகோஸ்லேவியா எதிர் கொலம்பியா
(இடம்; பொலக்னா) (ஒ-எ)

## பெரிய வெங்காய விற்பனை விலைக் கட்டுப்பாட்டின் கீழ்

கொழும்பு ஜூன் 14
பெரிய வெங்காய விற்பனைக்கு விலைக்கட்டுப்பாட்டுத்திட்டம் ஒன்றை அரசு அறிமுகப்படுத்த இருக்கிறது.

அமைச்சர் ஏ. ஆர். எம். மன்சூர் இத்தகவலை வெளியிட்டார்.

பாவனையாளர் பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் ஆகக்கூடுதலான சில்லறை விலைத்திட்டம் ஒன்றின் மூலம் இவ்விலைக்கட்டுப்பாடு அமுல் நடத்தப்படும்.

இப்போது கூட்டுறவு மொத்த விற்பனை ஸ்தாபனம் ஒரு கிலோ பெரிய வெங்காயத்தை 17 ரூபா 50 சதமாக விற்கிறது.

கூட்டுறவுச்சங்கங்கள்அதனை 20 ரூபாவாக விற்கின்றன. வெளிச்சந்தையில் இவ் வெங்காயம்50 ரூபா முதல் 70 ரூபா வரைவிற்கப்படுகிறது. (இ-எ

## இராமநாதன்கல்லூரிபவளவிழா நாளை முதல் 3 தினங்களுக்கு

யாழ்ப்பாணம் ஜூன் 14
சுன்னாகம் இராமநாதன் கல்லூரி பவளவிழா நாளை வெள்ளிக்கிழமை தொடக்கம் ஞாயிற்றுக்கிழமைவரை நடைபெறும்.

நாளைய நிகழ்ச்சியில் யாழ் பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் ஏ. துரைராஜா, திருமதி துரைராஜா பிரதம விருந்தினர்களாகவும், யாழ். பல்கலைக்கழக பேராசிரியர் பிரம்மஸ்ரீ கைலாசநாதக்குருக்கள்சிறப்பு விருந்தினராகவும், மருதனார் மடம் உதவிக்கல்விப்பணிப்பாளர் திரு. ஆர்.கே.குலசேகரன் மருதனார்மடம் கோட்டக் கல்வி நிலைய கல்வி அதிகாரி திருமதி. ஏ. துரைசிங்கம் விசேச விருந்தினர்களாகவும்

யாழ். பல்கலைக்கழக நுண்கலைப்பீடத் தலைவர் பேராசிரியர்கா.சிவத்தம்பி,இளைப்பாறிய சட்டத்தரணி திரு. என். சிவப்பிரகாசம், யாழ் பல்கலைக்கழக கல்வித்துறை கலாநிதி சபா ஜெயராஜா, உடுவில் உதவி அரசாங்க அதிபர் திரு ஆ. மகாலிங்கம் ஆகியோர் கௌரவ விருந்தினர்களாகவும் கலந்து கொள்வார்கள்.

சனிக்கிழமை பழைய மாணவிகளின் ஒன்று கூடலும் பவளவிழா மலர் வெளியீட்டு நிகழ்ச்சியும் நடைபெறும்.

அன்றைய நிகழ்ச்சியில் சிவத்தமிழ்ச்செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி பிரதம விருந்தினராகவும், நல்லை ஞானசம்பந்தர் ஆதீன சோமசுந்தரத் தம்பிரான் சிறப்பு விருந்தினராகவும் கலந்து கொள்வார்கள்

ஞாயிற்றுக்கிழமை வடபிராந்தியக் கல்விப்பணிப்பாளர் திரு. இரா சுந்தரலிங்கம், திருமதி தேவராணி சுந்தரலிங்கம் பிரதம விருந்தினர்களாகவும், கல்வித்திணைக்கள அதிகாரி திரு. தங்கராஜா சிறப்பு விருந்தினராகவும் கலந்து கொள்வார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org